
விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து




சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 14 வியாழக்கிழமை (27.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 099

## ஆசியப் பிராந்திய நாடுகளில்

# இலங்கையின் ஆயுதக் கொள்வனவால் குழப்பமடைந்துள்ள இந்திய அரசாங்கம்

(புதுடில்லி)

ஆசியப் பிராந்திய நாடுகளில் இலங்கை அரசின் ஆயுதக் கொள்வனவு அதிகரித்துள்ளதையடுத்து இந்தியா குழப்ப மடைந்துள்ளது. தமது நாட்டைக் கைவிட்டு ஏனைய நாடுக ளில் இலங்கை அரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்வ தால் இந்தியாவின் தேசிய கொள்கைக்கு பெரும் சவால் ஏற் பட்டுள்ளதாக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## 'பிரபாகரன்' திரைப்பட இயக்குநர் தமிழகத்தில் தாக்கப்பட்டார்

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலை வர் பிரபாகரன் குறித்து படம் எடுத்துள்ள சிங் கள இயக்குநரைக் கண்டித்து சென்னையில் தமிழர் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தினர்.

அப்போது இயக்குநர் சரமாரியாகத் தாக் கப்பட்டுள்ளார். இலங்கையைச் சேர்ந்த துஷார பீரிஸ் என்பவர் 'பிரபாகரன்' என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் குறித்து படம் எடுத்துள் ளார்.

இந்தப் படத்தைச் சிங்களத்தில் எடுத்துள்ள அவர், படத்தின் இறுதிக் கட்ட வேலைகள் மற் றும் பிறிண்ட் போடுவதற்காகச் சென்னைக் குச் சென்றுள்ளார். கே.கே.நகரிலுள்ள ஜெமினி கலர் லாப்பில் பிறிண்ட் போடும் பணி நடந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் 11 பேர் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு விசுவமடுப் பகுதியிலிருந்து இந்தியாவுக்குப் படகு மூலம் செல்ல முயன்ற 11 பேரை இலங்கைக் கடற்படையினர் நெடுந் தீவுக் கடலில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும் மற்றொரு குடும்பத்தைச் சேர்ந்த 6 மாதக் கைக்குழந்தை உட்பட 3 பேரும் மற் றும் படகோட்டிகளும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை (10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கை இணைப்பதற்கு சர்வகட்சிக் குழுவினர் இணக்கம்?

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு தனியானதொரு அல கை வழங்கி வடக்குக் கிழக்கை இணைப்ப தற்கு சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத் தில் பொது இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி நிஷாம் காரியப்பர் முன் வைத்த பிரேரணையை ஏற்றுக் கொள்வதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் பேரா சிரியர் திஸ்ஸ விதாரண தலைமையில் கடந்த திங்கட்கிழமை கூடிய சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குத் தனியானதொரு அலகினை வழங்கி வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் யோச னைக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்களான பேரியல் அஷ்ரப், ஏ.எல்.எம்.அதாவுல்லா , சேகு இஸ்ஸதீன் ஆகியோர் தமது விருப்பங்களைத் தெரிவித் துக் கொண்டுள்ளனர்.

முஸ்லிம் சமூகத்தைக் கலந்தாலோசிக் காமல் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தி ருப்பதாகக் கூறியிருக்கும் சிறிலங்கா முஸ் லிம் காங்கிரஸ், (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளையான் குழுவின் ஆயுதங்களை களைவதை ஏற்றுக்கொள்ள முடியாது

### அமைச்சர் ஜெயராஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளையான் குழுவின் ஆயுதங்கள் களையப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என வீதி அபி விருத்தியமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கருணா குழுவையோ, பிள்ளையான் குழுவையோ நிராயுதபாணியாக்குவதை ஏற் றுக் கொள்ள முடியாது. பிள்ளையான், கரு ணாவை நிராயுதபாணிகளாக்க வேண்டும் எனில் பிரபாகரனை நிராயுதபாணியாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு செய்யாது விடின் கருணா, பிள் ளையான் குழுக்களை நிராயுதபாணிகளாக் குவது என்பது சாத்தியப்படாது என்று தெரி வித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.வில் கிளைமோர்த் தாக்குதல் பொலிஸ் அதிகாரிகள் இருவர் பலி

### மேலும் நால்வர் படுகாயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு காஞ்சிரங்குடாவில் நேற்றுக் காலை பாதுகாப்பு நடைமுறைகளைப் பார் வையிட்ட சிறப்பு அதிரடிப் படையினரையும் பொலிஸ் உயர் அதிகாரிகளையும் உள்ளடக் கிய பாதுகாப்பு உயர் மட்ட அதிகாரிகள் குழு வை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளை மோர்த் தாக்குதலில் பொலிஸ் உயர் அதிகாரி கள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படை அதிகாரி ஒருவர் உட்பட இரண்டு அதிரடிப் படையினரும் இரண்டு பொலிஸாரும் படுகாயம் அடைந் துள்ளனர். காஞ்சிரங்குடா மணற்காடு என்ற இடத்தில் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 9.10 மணியளவில் இத் தாக்குதல் இடம்பெற் றுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை நோக்கி சென்றவர்கள் மீது இரு தரப்பினரும் துப்பாக்கிச் சூடு

### மூவர் பலி; மூவர் படுகாயம்

(கொழும்பு)

வவுனியா ஓமந்தை இராணுவ முன்னரங் கப் பகுதியை நோக்கி விடுதலைப்புலிகளின் பகுதிகளிலிருந்து சென்றதாகத் தெரிவிக்கப் படும் நீர்கொழும்புப் பிரதேசத்தைச் சேர்ந்த வர்கள் மீது இரு தரப்பிலிருந்தும் நடத்தப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். மூன்று பேர் காயம டைந்துள்ளனர். ஐந்து பேர் இராணுவத்தின ரால் கைது செய்யப்பட்டிருப்பதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மரணமடைந்தவர்க ளில் ஒருவர் தமிழர் என்றும் ஏனைய அனை வரும் சிங்களவர்கள் என்றும் தெரிவிக்கப்படு கின்றது. காயமடைந்தவர்களை இராணுவத் தினர் உலங்கு வானூர்தி மூலமாக உடனடி யாக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு எடுத் துச்சென்று சிகிச்சைக்காக அனுமதித்திருப்ப தாகவும் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டி ருக்கின்றது.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஐந்துபேரும் இராணுவ பொலிஸாரின் விசார ணைகளின்போது தெரிவித்துள்ள தகவலின் படி,

தாங்கள் மொத்தம் 12 பேர் என்றும் தங்க ளை 2007 (10 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலும் கிளிநொச்சியிலும் நேற்று விமானத் தாக்குதல்கள்

(கொழும்பு)

மன்னார் பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய தளங்கள் மீது விமானப் படையினர் நேற்றுக் காலை இரண்டு பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காலை 10.15 மணிக்கு எம்.ஐ.-24 ரக ஹெலிகொப்டர்கள் மன்னாரில் அலன்குளம் மற்றும் களியடஞ்சன் ஆகிய பிரதேசங்க ளில் இனங்காணப்பட்ட புலிகளின் முக்கிய தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாக விமா னப் படையின் பேச்சாளர் கொமாண்டர் அன்றூ விஜேயசூரிய தெரிவித்தார்.

இதேவேளை கிளிநொச்சியிலுள்ள விசுவ மடுப் பிரதேசத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கல்வியியல் முதுமாணி கற்கை நெறி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் முதுமாணி 2007/2008 கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 122பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறும் என பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி அறிவித்துள்ளார்.

*நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு,*

பூலோகசிங்கம் அகிலலோகநாயகம், நடேசு அனந்தசயனன், அப்புத்துரை ஆனந்தராஜா, ஆறுமுகம் அன்ரன்போல், மஞ்சுளா அன்ரனி, சூரியவதனி அரசரட்ணம், தர்மராஜா அருளரசன், பரமேஸ்வரராசா அருந்தவம், மலர்விழி அசோகலிங்கம், சசிசுகேதினி ஐயாத்துரை, செல்வரட்ணம் பாஸ்கரன், சண்முகராஜா பாஸ்கரன், பொன்னையா சந்திரகுலசிங்கம், சீவரட்ணம் இலக்குமிகரன், கந்தசாமி எழிலழகன், சுசிலாதேவி கணேஷ்,

புவனேஸ்வரி கணேசலிங்கம், ஞானசக்தி கணேசானந்தன், சதாசிவம் கணேஸ்வரன், விக்டர் இம்மனுவல் கஸ்ரன் றோய், செல்லையா இளங்கோ, சங்கமித்த ஜெயக்குமார், சுலபமதி கனகலிங்கம், வசந்தாதேவி கனகேந்திரன், சிவரஞ்சினி கணபதிப்பிள்ளை, கமலாவதி கந்தசாமி, இராஜேந்திரன் கணேசானந்தன், நாகப்பர் கண்ணதாசன், கந்தசாமி கண்ணன், கந்தன் கணபதி,

ஜிவாஜினி கந்தசாமி, நடராஜா கந்தவனச்செல்வன், கலாறஜனி கபிலன், சரோஜாதேவி கருணாகரன், செளந்தராதேவி காசிப்பிள்ளை, சின்னத்துரை கதிரமலை, ஆறுமுகம் கதிர்காமநாதன், வானதி கதிர்காமலிங்கம், ஜெகசோதி கோகுலவாசன், கிருட்ணபிள்ளை கிருஸ்ணகுமார், சச்சிதானந்தம் கிருஸ்ணானந்தம், சின்னத்தம்பி குலேந்திரராஜா,

இராமநாதன் குணநாதன், லலிதாலிங்கேஸ்வரன், அம்பலவாணர் லோகநாதன், சொர்ணலிங்கம் லோகேஸ்வரன், அலோசியஸ் மில்றோய் கிறிஸ்றி மகேந்திரன், ரஜனி மங்களேஸ்வர சர்மா, டொறீன் புஸ்பராணி மன்மதநாயகம், இராமலிங்கம் மன்மதராஜன், அருணாசலம் மனோரஞ்சிதன், றோசலின் செல்வமகால் மோகனதாஸ், சிதம்பரம் நாகராஜா,

வி.நந்தீஸ்வரன், இராசதுரை நவகேதீஸ்வரன், பிரதா நவரட்ணம், இராசையா நித்தியானந்தன், பழனியாண்டவர் பரணீதரன், அஞ்சலோ செபஸ்ரியன் இரட்ணகுமார் பற்றிக், லதா பேரானந்தன், முத்துக் கிருஸ்ணன் பிரபாகர், வைரமுத்து பிரேமதாஸ், எலிசபெத் ஜெயசோதி புத்திசிகாமணி, கௌசலாதேவி ரகு,

நாகரட்ணம் ராஜன், சசிகலா இராஜசேகரம், தேவகி இராமேஸ்வரன், குமாரசாமி ரவீந்திரா, நடராஜா சபாரட்ணசிங்கி, வளர்மதி சங்கரலிங்கம், சபாரட்ணம் சரவணபவன், கந்தசாமி சரவணபவன், மகாலிங்கம் சத்தியகுமார், பத்மலோசினி சற்குணமூர்த்தி, சுப்பிரமணியம் சயந்தன், சதானந்தன் செல்வானந்தன், துரைசிங்கம் செல்வராஜா,

பாலசிங்கம் சண்முகானந்தன், சிவசுபைதா ஸ்ரீகணேசன், சிவப்பிரகாசம் சிவகுமார், வேணுகா சிவகுமார், ஞானேஸ்வரி சிவகுமாரன், லெய்சி அன்ரனெற் சுபத்திரா சிவலிங்கம், நவரட்ணம் சிவலிங்கம், செளந்தலாதேவி சிவலிங்கம், அழகுராணி சிவானந்தம், மகாலிங்கம் சிவானந்தன், உலகநாதபிள்ளை சிவநாதன், ரஞ்சினி சிவராஜா, நடுநாயகம் சூரியகுமார்,

கணேஸ் ஸ்ரீகரன், பாலசுப்பிரமணியம் ஸ்ரீகுமரபரன், சாருலதா ஸ்ரீஸ்குமார், சுமதி ஸ்ரீசுந்தரராஜா, இராஜரட்ணம் சுப்பிரமணியம், கணபதிப்பிள்ளை சுதாஸ்குமார், குசலவன் சுவேந்திரன், இராஜமனோகரி தம்பிமுத்து, இரட்ணம் தமிழ்மாறன், வினிதா தனேஸ்குமார்,

ஜானகியம்மாள் தர்மஜீலன், செளதாஜினி தர்மலிங்கம், கணேசன் தர்மதேவன், கணேசலிங்கம் தவசீலன், தயாளசிங்கம் தவசேகர், திருநாவுக்கரசு தீபன், ஐயம்பிள்ளை தேவகிருபாகரன், ஐயாத்துரை தேவராஜன், பத்மநாதன் திருக்குமார், சிங்காரம் திவாகரன், கணேஸ் உதயரூபன், கயல்விழி உதயச்சந்தர்,

பாலகிருஸ்ணன் உதயசேகர், ரேணுகா வல்லிபுரநாதன், முருகேசு வரதராஜன், பிரபாலினி வரதராஜன், தியாகராஜா விக்னேஸ்வரன், வினோதரீ விஜயசுந்தரம், குருசாமி விமலன், மிமலாதேவி விமலநாதன், ஞானசெல்வி விநாயகமூர்த்தி, நற்குணராஜா விபுலன். (ந)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு பண்டிகை முற்பணம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு 2008 ஆம் ஆண்டுக்கான பண்டிகை முற்பணம் வழாங்கப்படவுள்ளது.

பாடசாலைகளில் கடமையாற்றும் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களில் பண்டிகை முற்பணம் பெற விரும்புவோர் தங்கள் பெயர் விபரங்களை கையொப்பத்துடன் தமது பாடசாலை அதிபர்களூடாக உடனடியாக வலயக்கல்வி அலுவலக நிதிப் பிரிவில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

மேலும் இதுவரை சம்பளம் பெறாது தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாத சம்பளப் பட்டியலுடன் சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ச-2,19)

## மட்டு. கல்வியியற் கல்லூரிக்கு மேலும் மூவருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்கு காத்திருப்போர் பட்டியலிலிருந்து மூன்று மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பீடாதிபதி கே.பாக்கியராஜா அறிவித்துள்ளார்.

இவர்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள் எனவும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு.

*சங்கீதம்*– கே.சித்திரா (சுழிபுரம் கிழக்கு); ரி.யசோபாரதி (நாவற்குழி கிழக்கு).

*நாடகமும் அரங்கியலும்*– பி.செந்தூர்செல்வன் (நெடுந்தீவு முதலாம் வட்டாரம்). (ஓ)

## ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது குறித்து கல்வி அமைச்சினதும் மாகாண சபைகளினதும் அதிகாரிகள் தொடர்ந்தும் கலந்துரையாடி வருவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பின்தங்கிய பிரதேசங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கல்வியியல் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் இருந்து வெளியேறும் பட்டதாரிகளை நியமிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய ஆசிரியர் மாற்றுக் கொள்கை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாடங்களுக்குரிய ஆசிரியர்களை தெரிவு செய்ய போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன. திறைசேரியின் அனுமதி கிடைத்ததும் இந்தப் போட்டிப் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய நியமனங்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

வடமேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கல்வி அமைச்சர் கூடிய கவனம் செலுத்தியுள்ளதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-5)

## முதுகலைமாணி கற்கை நெறி பதிவு செய்யும் திகதி அறிவிப்பு

### குறித்த திகதிக்குப் பின் பதிவு இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் 2007/2008 கல்வியாண்டில் முதுகலைமாணி குடித்தொகை அபிவிருத்தி, முதுகலைமாணி பிராந்தியத் திட்டமிடல், முதுகலைமாணி அபிவிருத்திக் கற்கை ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவானவர்களுக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி அறிவித்துள்ளார்.

இதில் குடித்தொகை அபிவிருத்திக் கற்கைக்குத் தெரிவானவர்கள் இன்று 27ஆம் திகதியும், பிராந்திய திட்டமிடல் கற்கைநெறிக்குத் தெரிவானவர்கள் நாளை 28ஆம் திகதியும், அபிவிருத்திக் கற்கை நெறிக்குத் தெரிவானவர்கள் இம் மாதம் 31ஆம் திகதியும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறும், குறித்த திகதிகளில் பதிவினை மேற்கொள்ளாதவர்களுக்குப் பதிலாக காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ந)

# அரசியல் உடன்பாட்டை ஏற்படுத்த இலங்கை வந்துள்ள பிரி. எம்.பி

## அரசியல் தலைவர்களுடன் பேச்சு

(கொழும்பு)

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசாங்க பாதுகாப்பு நிழல் செயலாளருமான டாக்டர் லியம் பொக்ஸ், அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையே அரசியல் உடன்பாடொன்றை ஏற்படுத்துவதற்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் அழைப்பின்பேரில் இலங்கை வந்துள்ளார்.

1997இல் இரு பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையில் 'பொக்ஸ் உடன்படிக்கை' என அழைக்கப்படும் உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு மத்தியஸ்தராக செயற்பட்டமை போல மீளவும் செயற்படவுள்ளார்.

இவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் றோகித போகொல்லாகம மற்றும் சமாதான செயலகத்தின் தலைவர் டாக்டர் ரஜீவ விஜயசிங்க ஆகியோருடன் இவ்வாரம் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளார்.

அரசியல் உடன்படிக்கை முறிவடைந்து வன்முறை தலைதூக்குவதற்கு முந்திய காலப்பகுதியில் 1997இல் சமாதானப் பேச்சுவார்த்தையின் ஆரம்ப கட்டத்தில் இந்த உடன்பாடு ஏற்பட்டு பின்னர் நோர்வே அதனைப் பொறுப்பேற்றுக்கொண்டது.

இலங்கையில் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக பிரச்சினைக்குரியவரென சில பிரிவினரால் விமர்சிக்கப்பட்ட இவர் நேற்றைய தினம் சர்வகட்சிக்குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண, ஜாதிக ஹெல உறுமய, ஐ.தே.கட்சியின் சுதந்திரக்குழு தலைவர் கரு ஜெயசூரியா ஆகியோரைச் சந்தித்தார்.

வெளிவிவகார அமைச்சர் றோகித்த போகொல்லாகமவின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள டாக்டர் பொக்ஸ் இந்த வாரத்தில் திட்டமிட்டபடி பேச்சுக்களை மேற்கொள்வார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டாக்டர் பொக்ஸ் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பலதரப்பட்ட அரசியல்வாதிகளையும் சந்தித்து கருத்துப் பரிமாறல் செய்துகொண்டார்.

தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை உன்னிப்பாக கவனத்தில் எடுத்துக் கொள்வதாக உறுதியளித்த அவர் லண்டனில் மேலும் பல பிரதிநிதிகளையும் சந்திப்பதாகக் கூறினார். (ச,து)

## எயிட்ஸ் தொற்றுக்குள்ளானவர்களில் 960 பேர் இலங்கையில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் தொற்றுநோய்க்கு உள்ளானவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தில் இனம் காணப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

எயிட்ஸ் நோய்த் தொற்று உள்ளவர்களில் 60 வீதமானவர்கள் மேல் மாகாணத்திலேயே காணப்படுவதாக தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் எயிட்ஸ் நோய்த்தொற்றுக்கு உள்ளான 960 பேர் இனம் காணப்பட்டுள்ளதாக பாலியல் நோய் தடுப்புப்பிரிவின் பணிப்பாளர் டாக்டர் நிமல் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் நாடு முழுவதிலும் 4ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாகி இருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-2)

## பேச்சு ஆங்கிலம், எழுத்து கற்கை நெறி நிகழ்ச்சித்திட்டம்

(அல்வாய்)

ஆங்கில வள ஆசிரியர் நிலையத்தினால் 2008ஆம் ஆண்டுக்குரிய பேச்சு ஆங்கிலம் மற்றும் எழுத்து பயிற்சி நெறிகள் நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறி நிகழ்ச்சித்திட்டம் ஆசிரியர் வள நிலையத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் பாடசாலை நேரத்திலேயே நிறைவேற்றப்படவுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பேச்சு ஆங்கிலப் பயிற்சி இம்மாதம் 31ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிக்கு ஒதுக்கப்பட்ட காலம் 32 மணித்தியாலங்களாகும். வாய்மொழிப்பரீட்சை யூன் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

மாணவர்கள் இப்பரீட்சைக்கு விண்ணப்பங்களை மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். இதேவேளை எழுத்துப் பரீட்சைக்கான கற்கை நெறி யூலை மாதத்தில் ஆரம்பமாகும். இக்கற்கை நெறிக்கு ஒதுக்கப்பட்ட காலம் 40 மணித்தியாலங்கள். இக்கற்கைநெறிக்கான பரீட்சை இவ்வருட இறுதிக்குள் நடைபெறும் எனவும் இதற்கான விண்ணப்பங்களை ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ-19)

# இன்று ஒரு தகவல்

## மெய்ப்பொருள் காண்பது அறிவு

தந்தியை விட வேகமாகப் போகக் கூடியது எது? என்று கேட்டார் ஒருவர். வதந்தி என்றார் மற்றவர். அவர் சொன்னதில் தப்பு இல்லை. வதந்தி வேகமாகப் பரவுவதற்குக் காரணம் என்ன? ஒன்றை இரண்டாக மிகைப்படுத்திச் சொல்லும் மனித சுபாவம் ஒரு காரணம். சொல்வதை அப்படியே நம்புவது இன்னொரு காரணம்.

"எப்பொருள் எத்தன்மைதாயினும், யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்கிறார் வள்ளுவர். அவர் சொல்வதை இந்தக் காலத்திலே யார் கேட்கிறார்கள்? யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி விடுவதா? அறிவு வேலை செய்ய வேண்டும். அதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். முக்கியமான பொறுப்பில் உள்ளவர்களுக்கு இது ரொம்பவும் முக்கியமான ஒரு தகுதி.

ஓர் ஊரிலே சாதாரணமான ஆள் ஒருவன் ஒரு கழுதையை மிகவும் பிரியமாக வளர்த்து வந்தான். அந்தக் கழுதையை விட அவனுக்கு வேறு நண்பர்கள் கிடையாது. அந்தக் கழுதைக்கு காந்தர்வசேனன் எனப் பெயரிட்டு ஆசையாக பராமரித்தான். எந்த நேரமும் அந்தப் பெயரைச் சொல்லித்தான் கழுதையைக் கூப்பிடுவான். அவ்வளவு பிரியமாக வளர்ந்த கழுதை ஒருநாள் திடீரென்று இறந்துவிட்டது. கழுதையின் பிரிவால் அவன் மிகவும் வேதனைப்பட்டான். பித்துப்பிடித்தவன் போல இருந்தான். அவனுக்கு வேண்டிய நண்பன் அந்த நேரம் அவனைப் பார்க்க வந்தான். சாவாரைப் போல இருந்தவனைப் பார்த்து "ஏனப்பா இப்படி இருக்கிறாய். என்ன நடந்தது எனக் கேட்டான். காந்தர்வசேனன் இறந்துவிட்டான் என்று சொல்லி ஓ என்று அழ ஆரம்பித்தான். காந்தர்வசேனன் யார் என்று கேட்டான். அதற்கு அவன் பதில் சொல்லாமல் காந்தர்வசேனா என்னை விட்டுப் போய்விட்டாயே என பலத்து அழுதான்.

அவன் அப்படி குலுங்கிக் குலுங்கி அழுவதைப் பார்த்த நண்பன் காந்தர்வசேனன் என்பவன் முக்கியமான ஒரு பெரிய மனிதன் போல் தெரிகிறது என நினைத்தான். நண்பனின் துயரில் பங்கு கொள்ள வேண்டுமெனத் தீர்மானித்து தலையை மொட்டையடித்து மீசையை எடுத்துவிட்டு கறுப்பு உடை அணிந்து கொண்டான். கார்ந்தர்வசேனன் இறந்துவிட்டான் என்ற செய்தி காற்றுவாக்கில் பரவ ஆரம்பித்தது. ஊரில் உள்ளவர்கள் இதைக் கேட்டதும் தங்களது தலையை மொட்டையடித்து கறுப்பு உடை அணிய ஆரம்பித்தார்கள். ஒரே நாளில் நாடே துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது. எங்கே பார்த்தாலும் மொட்டைத்தலை-கறுப்புத் துணி.

அந்த நாட்டு அமைச்சர் இதைப் பார்த்தார். ஜனங்கள் எல்லாரும் ஏன் இப்படி துக்கம் அனுஷ்டிக்கிறார்கள் என நினைத்து இவரை விசாரித்தார். "காந்தர்வசேனன் இறந்துவிட்டார். அதனால்தான் துக்கம் அனுஷ்டிக்கிறோம்" என்று சொன்னார்கள். அவராவது காந்தர்வசேனன் என்று சொல்கிறீர்களே, அவர் யார்? என்று விசாரித்திருக்கலாம் அல்லவா? அப்படிச் செய்வில்லை. தானும் மக்கள் துயரில் பங்கெடுக்க வேண்டுமென நினைத்தார். மொட்டை அடித்துக் கொண்டு கறுப்பு ஆடை அணிந்து துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார். அமைச்சர் மொட்டையடித்து துக்கம் அனுஷ்டிக்கிறார் என்பது ராஜாவுக்கு தெரியவந்தது. உடனே தானும் மொட்டை அடித்து துக்கம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்.

அன்று ராத்திரி ராஜா மொட்டைத் தலையுடன் துக்கமாக அந்தப்புறம் சென்றார். இதைப் பார்த்த ராணி ஏன் இப்படி மொட்டைத் தலையுடன் துக்கமாக வருகிறீர்கள்? என்ன காரணம்?" என்று கேட்டார். ராஜாவும் கவலையுடன் காந்தர்வசேனன் இறந்துவிட்டாராம். ஜனங்கள் எல்லாரும் துக்கத்துடன் இருக்கிறார்கள். நானும் அதில் பங்கெடுத்துள்ளேன். இது ராஜாவின் கடமை அல்லவா" என்றார்.

"அது சரி... காந்தர்வசேனன் யார்? உங்கள் அப்பாவா? அண்ணனா? எதற்காக தலையை மொட்டையடித்தீர்கள்?" என்று கேட்டார் ராணி. அதன் பின் தான் ராஜா யோசிக்க ஆரம்பித்தார். அமைச்சரைக் கூப்பிட்டு விபரம் கேட்டார். அப்பொழுதுதான் அமைச்சரும் யோசிக்க ஆரம்பித்தார்.

ஜனங்களைக் கூப்பிட்டு விசாரித்தார். ஒவ்வொருவராக ஒருவரையொருவர் விசாரித்து கடைசியாக முதலாவது மொட்டையடித்த ஆளைக் கண்டுபிடித்தார்கள். காந்தர்வசேனன் யாரென்று கேட்டார்கள். அவரும் அவர்களை காந்தர்வசேனன் இறந்துவிட்டாரென அழுது புலம்பிக் கொண்டிருந்த ஆளிடம் கூட்டிச்சென்றார். ஜனங்கள் காந்தர்வசேனன் யார் என்று அவரிடம் கேட்டார்கள். அது என்னுடைய கழுதை என்றான் அவன்.

ராஜாவும் மந்திரியும் தலை குனிந்தார்கள். எல்லாரும் சொல்வதை கண்ணை மூடிக்கொண்டு நம்ப ஆரம்பித்தால் கதை இப்படித்தான் போய்முடியும். ஸ்ரீ சிவானந்தர் சொன்ன குட்டிக்கதை இது. இந்தக் காலத்திலும் சிலர் சொல்லும் விஷயம் "கப்ஸா"வாக இருக்கும்.

இப்படித்தான் ஒருவர் என்னிடம் வந்தார். "சார்... நாங்கள் 10 பேர் ஒரே குடையிலே வந்தோம். ஒரு துளி தண்ணீர் கூட எங்கள் யார் மேலேயும் படவில்லை" என்றார். "அது எப்படி?" என்று விசாரித்தேன்.

"நாங்கள் வந்தபொழுது மழையே பெய்யவில்லையே" என்றார் அவர்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர் கொலை பிரதான சாட்சியாளருக்கு அச்சுறுத்தல்

மூதூர் அக்ஷன் பெய்ம் நிறுவனப் பணியாளர்கள் 17 பேரின் படுகொலை குறித்த முக்கிய சாட்சியாளர் இனந்தெரியாத நபர்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளார். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சியமளித்த சாட்சியாளருக்கு கடிதம்மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

'எவ்வாறு ஆதாரங்களைப் பெற்றுக் கொண்டீர்கள் எனக் கோரி அச்சுறுத்தல் கடிதமொன்று எனக்குக் கிடைக்கப் பெற்றது. ஆதாரங்களை வழங்குவதைவிடுத்து குடும்பத் துடன் வெளியேறுமாறு கோரி மற்றுமொரு கடிதம் எனக்கு அனுப்பப்பட்டுள்ளது' என அந்த சாட்சியாளர் கூறியுள்ளார்.

'இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு நான் முகம்கொடுக்கின்றபோதும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அதனை ஏற்றுக்கொள்ள மறுகின்றனர். அதனால் அச்சுறுத்தல்கள்பற்றி அவர்களிடம் கூறவில்லை. இதற்கு எதிராகச் செயற்பட்டு என்னிடம் வந்து அச்சுறுத்தல்கள் பற்றிக் கேட்கவேண்டுமென நான் கோரிக்கை விடுகின்றேன்' என அவர் தெரி வித்துள்ளார்.

'நான் இருக்கும் இடத்திலிருந்து இங்கு நேரடிபேருந்துசேவை இல்லை. இதனால் தனியார் வாகனமொன்றை 8 ஆயிரம் ரூபா வாடகைக்கு அமர்த்தியே ஆணைக்குழுவின்விசாரணைக்கு வந்துள்ளேன். ஆணைக் குழுவால் வழங்கப்படும். 4ஆயிரம் ரூபா போதுமானதாக இல்லை. இதனால் பல சாட்சிகளைக் கூற முன்வருவதில்லை' என அந்தசாட்சியாளர் கூறியுள்ளார்.

17 பணியாளர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை நேரடியாக கண்ட ஏனையவர்கள் குறித்த பெயர் விபரங்களை தெரிவிக்க மறுத்திருந்த அவர், தான் சாட்சி சொல்வதற்கு முன்வந்திருப்பதால் இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருப் பதாகத் தெரிவித்திருந்தார். (அ-5)

# அடை மழையானாலும் யுத்தம் தொடரும்

## இராணுவ பேச்சாளர் தெரிவிப்பு

முகமாலை, மன்னார் மற்றும் வெலிஓயா பகுதிகளில் கடந்த சில நாட்களாக இருதரப்பினருக்கும் இடையில் கடுமையான மோதல்கள் இடம்பெறுகின்றன. 2008 ஆம் ஆண்டு ஆரம்பம்முதல் கடந்த திங்கட்கிழமை வரை புலிகளின் 115 சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. அடைமழையினால் இடையூறு ஏற்படினும் வடக்கில் இடம்பெறுகின்ற தாக்குதல்கள் கைவிடப்படமாட்டாது என்று பிரிகேடியர் உதயநாணய்க்கார தெரிவித்தார்.

மன்னாரில் இதுவரையிலும் 31 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பை படையினர் கைப்பற்றியுள்ளதுடன் அங்கு தங்களது பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர். மன்னாரில் அரசாங்க கட்டுப்பாடற்ற பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது, அடைமழை குறுக்கிட்டாலும் வடக்கில் படையினரால் முன்னெடுக்கப்படுகின்ற மோதல்கள் கைவிடப்படமாட்டாது. ஜனவரி மாதத்திலிருந்து இதுவரையிலும் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு 186 சிவிலியன்கள் வருகை தந்துள்ளனர்.

விடத்தல்தீவிலிருந்து மன்னாருக்கும், முல்லைதீவிலிருந்து புல்மோட்டைக்குமே பொதுமக்கள் வருகை தந்துள்ளனர். வவுனியாவில் தனியார் நிறுவனமொன்றின் முகாமையாளர் ஒருவரை புலிகள் கடத்திச் சென்றபோது படையினர் புலிகளைக் கைது செய்துள்ளனர். இவர்களிடமிருந்து துப்பாக்கி, கைக்குண்டு மற்றும் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்டவரில் ஒருவர் சயனைட் உட்கொண்டதனால் அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-5)

# பாடப் புத்தகங்களை துரிதமாக அச்சிட்டு முடிக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடப்புத்தகங்கள் அச்சிடப்படும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை பெரும் சிக்கலை தோற்றியுள்ளதாக கல்வியமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. மொத்தமாக அச்சிடப்பட வேண்டிய பாடப் புத்தகங்களில் 75 வீதமே இதுவரை அச்சிடப்பட்டிருப்பதாக கல்வியமைச்சின் செயலாளர் நிமல் பண்டார தெரிவித்தார்.

பாடப் புத்தகங்களை அச்சிடுவதற்கு முன் வந்த நிறுவனம் தனது கடமையை சரிவர நிறைவேற்றாமையே இந்தப் பிரச்சினைக்கு முக்கிய காரணம் என்று கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் இத்தகைய சிக்கல்கள் எழுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார். பாடப் புத்தகங்களை குறிப்பிட்ட நாட்களுக்குள் அச்சிட முடியும் என்பதை நிச்சயமாகக் கூற முடியாவிட்டாலும் துரிதமாக அச்சிட்டு முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டில் உள்ள பல பாடசாலைகளில் குறிப்பாக தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் சில முக்கிய பாடங்களுக்கான பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# இராசிபலன்

27.03.2008
(பங்குனி 14, வியாழக்கிழமை)
பஞ்சமி முற்பகல் 8.23 மணிவரை
அனுஷம் பிற்பகல் 03.52 மணிவரை
இராகுகாலம் 01.44-03.14மணிவரை
சுபநேரம்-07.44-09.14மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பொருள் விரயம், எதிர்பாராத அச்சம், உடல்நலக் குறைவு, போசன சுகம். |
| இடபம் | குடும்பசுகம், தெய்வசிந்தை, கீர்த்தி, காரிய அனுகூலம். |
| மிதுனம் | பணவருவாய், திடீர் பயணம், சத்துருஜெயம், முயற்சி கைகூடும். |
| கடகம் | காரிய இடையூறு, கௌரவக் குறைவு, உடல்நலக் குறைவு, புத்திரரால் கவலை. |
| சிங்கம் | தன்னம்பிக்கைக்குறைவு, சுப செலவு, திடீர் நன்மை, ரோகநிலை. |
| கன்னி | சகோதரர் வழி நன்மை, மனோ தைரியம், இஷ்டசித்தி, தனவருவாய். |
| துலாம் | சங்கடமான நிலை, விவாதம், அதிக செலவு, உஷ்ணநிலை. |
| விருச்சிகம் | வெகுமானம், போசன சுகம், புதிய முயற்சி, தெய்வசிந்தை. |
| தனுசு | அமைதிக்குறைவு, திடீர் பயணம், சயனசுகக்குறைவு, முயற்சிதர்மதம். |
| மகரம் | தனதானிய சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, சயனசுகம், முயற்சி கைகூடும். |
| கும்பம் | அதிகாரம், எடுத்த காரியம் கை கூடும், பிறர் உதவி, புதிய திருப்பம். |
| மீனம் | ஆன்றோர் சந்திப்பு, உடல் உழைப்பு, புதியதிட்டமிடல், வீண்பயம். |

வளவன்

# பின்தங்கிய பிரதேசங்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

பின்தங்கிய பிரதேசங்களில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு கல்வியியற் கல்லூரி மற்றும் பீடங்களில் இருந்து வெளியாகும் ஆசிரியர்களையும், பட்டதாரிகளையும் இணைத்துக் கொள்ள கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடுமுழுவதிலும் உள்ள ஆசிரியர் பற்றாக்குறை குறித்து கல்வியமைச்சினதும், மாகாண சபைகளினதும் அதிகாரிகள் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றனர்.

தேசிய ஆசிரியர் மாற்றுக்கொள்கை ஒன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாடங்களுக்கமைய ஆசிரியர்களைத் தெரிவு செய்ய போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்ட அதேவேளை திறைசேரியின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் இதற்கான நியமனம் பெற்றுக்கொடுக்கப்படும் என கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக வடமேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில் கல்வியமைச்சர் கவனம் செலுத்தியுள்ளார். (அ-7)

# சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும்

## பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை அடுத்த வாரம் வெளியிட பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணிகள் பெருமளவு பூர்த்தியடைந்திருப்பதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டு விடுமுறைக்கு முன்னர் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த வருட கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு சுமார் 5 இலட்சத்து 30 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியதோடு நாடு முழுவதும் 3ஆயிரத்து 990 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடத்தப்பட்டிருந்தன. (அ-7)

# போக்குவரத்து சேவைகளின் பாதிப்பால் நெடுந்தீவு மக்கள் பெரும் சிரமம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கான படகுச் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவில் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த ஒரே ஒரு பஸ் வண்டியின் சேவையும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. பொதுமக்கள் மழையில் நனைந்து கால் நடையாக நடந்தும் தமது பயணங்களை மேற்கொள்ள வேண்டி இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

குறிகட்டுவான்-நெடுந்தீவு கடல் வழிப் பயணத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்த குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

பயணிகள் படகுச் சேவைக்குரிய குமுதினி பழுதடைந்தமையினால் தனியார் படகுகளில் மழையில் நனைந்த நிலையில் பயணிகள் கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேநேரம் நெடுந்தீவில் தரை வழிப் பயணத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும் ரயர்கள் சேதமடைந்த நிலையில் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

கடல் வழிப் பயணத்துக்கான படகும் தரை வழிப் பயணத்துக்கான பஸ் வண்டியும் ஒரே காலப் பகுதியில் பழுதடைந்திருப்பது நெடுந்தீவு வாழ்மக்களையும், நெடுந்தீவுக்கு கடமையின் நிமித்தம் சென்று திரும்பும் அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்களையும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாக்கி உள்ளது.

தற்பொழுது பெய்துவரும் மழை மற்றும் தாழ் அமுக்கக் காலநிலையில் கடலில் பயணம் செய்யும் போது நனைந்து கரையில் இறங்கி தரையிலும் நடந்து நனைந்து செல்கின்ற நிலை சம்பந்தப்பட்ட பயணிகளை கவலை கொள்ளச் செய்துள்ளது.

நெடுந்தீவு -குறிகட்டுவான் கடல்வழிப் பயணத்துக்குரிய குமுதினி பயணிகள் படகு அண்மையில் திருத்தி அமைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (அ-5)

## மீள்எழுச்சித் திட்டம் அறிமுக நிகழ்வு

யாழ். மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு உலக வங்கியானது அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீள் எழுச்சித்திட்டம் தொடர்பான அறிமுகநிகழ்வுநாளை வெள்ளிக் கிழமை பி.ப 2 மணியளவில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக கேட்போர் கூட மண்ட பத்தில் நடைபெற உள்ளதாக தெல்லிப்பழைப் பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

+++

யாழ் மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு உலக வங்கியினது அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீள் எழுச்சித் திட்டம் தொடர்பான அறிமுக நிகழ்வு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2மணியளவில் பருத்தித்துறை பிரதேச செயலக கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ள தாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர் .வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

## முதலுதவிப் பயிற்சி

அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலுதவி மற்றும் அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்பு பெறல் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்காக மூன்று பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி, வல்வை சிவகுரு வித்தியாலயம், புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு மூன்று நாள் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு யாழ். மாவட்டச் செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ இணைப்பாளர் ந. செல்வராஜின் வழி காட்டலில் கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தன் தலைமையில் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் இணைப்பாளர் எஸ் செல்வரஞ்சன், உதவி இணைப்பாளர் எஸ் . ஈழநேசன் ஆகியோர் இச் செயலமர்வினை நடாத்தினார்கள். ஏற்கனவே இப் பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டு அனர்த்தங்களை எதிர்கொள்ளல் பற்றிய பயிற்சியளிக்கப்பட்டதாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (அ)




## மக்களுடன் மக்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு

மக்களுடன் மக்களுக்கான கலந்துரையாடல்(P.P.D) அமைப்பும்கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து முன்னெடுக்கும் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்குமான மக்களுடன் மக்களுக்கான கலந்துரையாடல் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக் கு மருதனார்மடம், உரும்பிராய்- மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள விவசாயக் கல்லூரி கேட்போர் கூடத்தில், யாழ்.மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்கத்தலைவரும், P.P.D இணைப்பாளருமான என்.இன்பம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் யாழ்.மாவட்ட யாழ்.பல்கலைக் கழக P.P.D செயற்குழுப் பிரதிநிதி, விரிவுரையாளர் வி.பி. சிவநாதன் தொகுப்புரையை வழங்கவுள்ளார். (ஓ)

## பேராசிரியர் நந்தியின் பிறந்ததின நினைவு ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் நந்தி அறக்கட்டளை நிதியத்தால் அமரர் நந்தியின் 80 ஆவது பிறந்த தின நினைவு ஒன்றுகூடல் வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வன் ஆறு . திருமுருகன் தலைமையில் நடாத்தப்படவுள்ளது. நிகழ்வில் ,

'பேராசிரியர் நந்தி பற்றி...' யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கனும் 'மருத்துவ ஆசானாக பேராசிரியர் நந்தி' எனும் பொருளில் யாழ். மருத்துவ பீட சிரேஷ்ட பேராசிரியர் /உயிர் இரசாயனவியல் துறை பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும், 'நந்தியின் இலக்கியப்பணிகள்' எனும் பொருளில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும், 'நந்தியின் ஆன்மீகப்பணிகள்' எனும் தலைப் பில் யாழ் .போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி க. சிவனேசனும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அத்துடன் பேராசிரியர் நந்தியின் 'குட்டிகளுக்குப் பாட்டுக்கள்' என்ற இறுவெட்டு வெளியீடும் இடம்பெறும்.

அதன் முதற்பிரதியை திருமதி சாந்தி சிவஞானசுந்தரம் பெற்றுக் கொள்வார். மதிப்பீட்டுரையை த. தவநாதன் றொபேட் வழங்குவார். (அ)

## மக்கள் வங்கிக் கிளை திறக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காரை நகரில் வாழும் மக்கள் தாம் தொழில் முயற்சிகளைப் பெருக்குவதற்கான கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக தமது ஊரில் மக்கள் வங்கியின் கிளையொன்றைத் திறக்குமாறு மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளருக்கு கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை -தெக்கணப்பாய் அருள் மிகு கண்ணகி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் 29 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 29ஆம்திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, அனுக்ஞை,வாஸ்து சாந்தியைத் தொடர்ந்து பிற்பகல் 3மணிக்கு கும்பபூஜையுடன் திருவிழா ஆரம்பமாகும்.

தொடர்ந்து 5 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 7 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை தீர்த்தோற்சவமும் நடைபெற்று 8ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 3மணிக்கு வயிரவ பொங்கலுடன் உற்சவம் நிறைவுபெறும். (ஓ-6)

## கப்பல் பிரயாணம் தொடர்பான அறிவித்தல்

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமிடையிலான கப்பல் சேவை 27 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறாது எனவும் 28 ஆம்திகதி வெள்ளிக்கிழமை வழமைபோல் இடம்பெறும் எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் 26 ஆம்(புதன் கிழமை) 28ஆம் (வெள்ளிக்கிழமை) திகதிகளில் பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதிச் சீட்டினை பெற்றுக்கொண்டவர்கள் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமது பயணத்தினை மேற்கொள்ளுமாறும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் தரம் III ற்கான மாகாண பொது நிர்வாக அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட 101 அலுவலர்களுக்குமான பிரயாண ஒழுங்கு 28ஆம் திகதி அன்று செய்யப்பட்டுள்ளதாகவும் அரசாங்க அதிபர் மேலும் அறிவித்துள்ளார். (அ)

## புத்தகக் கண்காட்சியும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15 ஆம்திகதி முதல் ஏப்ரல் 23 ஆம்திகதி வரை சாவகச்சேரி நகர சபையினர், சாவகச்சேரி, நுணாவில், மீசாலை ஆகிய பொது நூலகங்களில் புத்தகக் கண்காட்சியினை நடாத்தவுள்ளனர்.

அத்துடன் இத் தினத்தையொட்டி பாடசாலை மாணவர்கள், நூலக வாசகர்கள், அரச அலுவலர்கள் ஆகியோரிடையே இலக்கியக் கருத்தரங்குகளையும் நடாத்தவுள்ளனர். (ஓ)

## பாலபண்டிதர் பரீட்சை

2008 ஆம் ஆண்டிற்கான சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இப் பரீட்சை மே மாதம் இறுதி வாரத்தில் நடைபெறுமெனவும், தரம் 2-11 இற்கான சைவநெறித்த தேர்வும், தரம்12 இற்கான இந்துநாகரிகம்/ இந்து சமய தேர்வும் நவம்பர் மாதம் 1ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமெனவும் சைவபரிபாலன சபை தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார். (ஓ)

## அடிப்படை முதலுதவி பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தால் 29 ஆம் திகதி அன்று நடாத்தப்படவிருந்த அடிப்படை முதலுதவிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாகவும், இப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி நடைபெறுமெனவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் சகல விண்ணப்பதாரிகளுக்கும் அறிவித்துள்ளார். (ஓ)

## தியான வகுப்பு

யாழ்ப்பாணம், சிவலிங்க யோகசேந்திரா நிலைய யோகாசன தியான வகுப்புக்கள் 31 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்கு குமாரசாமி வீதி, வேதாந்த மடத்தில் சிவலிங்க யோகசேந்திரா செயலாளர் எஸ். சோதிமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோர் பெயர் விபரங்களை சிவலிங்க யோகசேந்திரா, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பதிவு செய்வதுடன் பயிற்சி நெறியில் ஆண், பெண், சிறுவர், முதியோர் அனைவரும் கலந்துகொள்ளலாம் எனவும், இப் பயிற்சி நெறியைப் பூரணமாகப் பூர்த்தி செய்வோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும் என சிவலிங்க யோகசேந்திரா இயக்குநர் க.நிஜலிங்கம் தெரிவித்துள்ளார். (அ-7)

## ஆலய புனருத்தாரணம்

அல்வாய் வடமேற்கு சற்கோட்டை சித்தி விநாயகர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்படவுள்ளதால் சைவ அபிமானிகள் அனைவரும் தம்மாலான நிதியுதவியை வழங்கி உதவுமாறு ஆலய பரிபாலன சபைச் செயலாளர் த.சந்திரதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆலயத்தின் மகா மண்டபம், முன்வாசல் மண்டபம், மடப்பள்ளி, உள்வீதி சுற்றுமதில், பாலஸ்தாபனம் முதலிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும்,

இலங்கைவங்கி, பருத்தித்துறை கிளையில் 26169 என்ற கணக்கில் (ஆலயக் கணக்கு) தங்கள் நிதியுதவிகளை வழங்குமாறும் பரிபாலனசபையினர் வேண்டிக் கொண்டுள்ளனர். (அ)

## பேராளர் தெரிவுக்கூட்டம்

கல்விச் சேவையாளர் சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க யாழ்.மாவட்டப் பேராளர் தெரிவுக்கூட்டம் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் அதன் அங்கத் தவர்களைக் கலந்துகொள்ளுமாறு சமூக சேவைகள் சமூகநலத்துறை அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். இவர்களுக்கான அழைப்புக்கடிதம் சங்கத்தின் தலைமையகச் செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ளது. இடப்பெயர்வின் காரணமாக உரியவர்க்கு அழைப்புக் கிடைக்கும் வாய்ப்பு அரிதாகவே உள்ளது.

எனவே இக் கூட்டத்திற்கு முன்னோடியாக சங்க உறுப்பினர்கள் யாழ்.கச்சேரி மேல் மாடியில் உள்ள சமூக சேவைகள் சமூக நலத் துறை அமைச்சின் மாவட்ட இணைப்பாளரை சந்திக்குமாறு மாவட்ட இணைப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-7)





கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பழைய மாணவர் சங்கமும் இணைந்து நடாத்திய புதிய அதிபர் இ.இராசசேகரத்தின் வரவேற்பு மற்றும் முன்னைய அதிபர் அ.அகிலதாஸின் பிரிவுபசார நிகழ்வின் போது விருந்தினர்கள் விழாமண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதனையும், கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.சித்திரவடிவேல் அ.அகிலதாசுக்கு நினைவுச் சின்னம் வழங்குவதனையும் படங்களில் காணலாம்.

# பஸ்ராவில் கடும் சண்டை 30 தீவிரவாதிகள் பலி

## இரவு ஊரடங்கு அமுல்

(பக்தாத்)

ஈராக்கில் தீவிரவாதிகளுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவமும் அமெரிக்கா இராணுவமும் தாக்குதல் நடத்தி வருகிறது. ஷியா- சன்னி பிரிவினருக்கும் மோதல் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. ஷியா பிரிவினருக்கு எதிராக மெகதி படை என்ற அமைப்பு கடும் தாக்குதல் நடத்திவருகிறது.

பஸ்ரா நகரில் இந்த தீவிரவாதிகளுக்கும் இராணுவத்துக்கும் நேற்று முன்தினம் கடும் சண்டை நடந்தது. இதில் 30 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்த மோதல் இப்போது பல்வேறு நகரங்களுக்கும் பரவிவருகிறது. விரைவில் ஈராக்கில் உள்நாட்டு போர் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

போர் தீவிரம் அடைந்ததை தொடர்ந்து பஸ்ரா நகரில் இரவு நேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பஸ்ரா நகரில் உள்ள எண்ணை கிணறுகளை தகர்க்கவும் தீவிரவாதிகள் முயற்சி செய்து வருகிறார்கள். பக்தாத் அருகே குத் மற்றும் சிறு பகுதிகளை தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். (அ-5)

# பஸ் உருண்டு விழுந்து 28 பேர் பலி

ஹோண்டூராஸ் நாட்டின் சான்ஜெரானிமோ மாகாணத்தில் மலைப் பாதையில் சென்று



கொண்டிருந்த பஸ் பள்ளத்தில் உருண்டு விழுந்ததில் 28 பயணிகள் பலியானார்கள். 18 பேர் காயம் அடைந்தனர். பிரேக் பழுது அடைந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்தில் பலியானவர்களின் உடல்கள் சிதறி கிடக்கும் காட்சி. (அ-5)

# பயங்கரவாதத்துக்கு எதிரான போரை தொடருமாறு அமெரிக்கா வேண்டுகோள்

பாகிஸ்தானில் இடம்பெற்று வரும் வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு அனைத்துப் படையினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என புதிய பிரதமர் கிலானி கோரிக்கை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதாரம் மற்றும் ஏனைய பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்குள் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் பிரதிப்பாதுகாப்புச் செயலாளர் ஜோன் நீக்கிரோ பெண்டே மற்றும் உதவிச் செயலாளர் றிச்சட் பவுச்சர் ஆகியோரை பிரதமர் கிலானி நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார். பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் பயங்கரவாதத்திற்கு எதிராக தொடர்ந்த இராணுவநடவடிக்கைகளை புதிய அரசாங்கமும் முன்னெடுக்கவேண்டும் எனஅமெரிக்கா விரும்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# முக்கிய இராணுவ தளபதிகள் மாற்றம் முஷாரப்புக்கு நெருக்கடி அதிகரிப்பு

(இஸ்லாமாபாத்)

கிலானிபாகிஸ்தான்புதிய பிரதமராக நேற்று முன்தினம் பதவி ஏற்றார். அவருக்கு அதிபர் முஷாரப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். பதவி ஏற்பு விழாவில் பெனாசீர் கணவர் சர்தாரி முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

அதிபர் முஷாரப் பதவி விலக வேண்டும் . அவரை அதிபர் பதவியில் இருந்து நீக்க பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வருவோம் என்று ஏற்கனவே நவாஸ் ஷெரீப், சர்தாரி ஆகியோர் கூறியிருந்தனர்.

இப்போது முஷாரப் எதிர்ப்பாளர்கள் ஆட்சிக்கு வந்துள்ளதை தொடர்ந்து முஷாரப்புக்கு நெருக்கடி ஆரம்பித்துவிட்டது. கிலானி பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே முஷாரப்பால் பதவி நீக்கம் செய்யப்பட்டு வீட்டுக்காவில் வைக்கப்பட்ட தலைமை நீதிபதி இப்திகார் சவுத்திரியை விடுதலை செய்து முதல் உத்தரவு பிறப்பித்தார்.

இந்த நிலையில் இராணுவத்தில் முக்கிய தளபதிகள் பலரை மாற்றம் செய்து இராணுவ தலைமை தளபதி அஷ்பாக் கயானி உத்தர விட்டார். மாற்றம் செய்யப்பட்ட இராணுவ தளபதிகள் அனைவரும் முஷாரப் ஆதரவாளர்கள் தலைமை இராணுவ தளபதி அஷ்பாக் கயானியும்முஷாரப் ஆதரவாளராக இருந்தவர்முஷாரப்பால்நியமிக்கப்பட்ட இவரும் இப்போது அணி மாறி விட்டதால் முஷாரப்புக்கு நெருக்கடி மேலும் அதிகமாகும் என்று தெரிகிறது. (அ-5)

# 11 வாரங்களே ஆன குழந்தைக்கு நான்கு முறை மாரடைப்பு

(லண்டன்)

பிறந்து 11 வாரங்களே ஆன குழந்தைக்கு நான்கு முறை மாரடைப்பு ஏற்பட்ட சம்பவம்



பிரிட்டனில் நடந்துள்ளது. இந்த் சம்பவங்களுக்கு பின்பும் அந்த குழந்தை நல்ல உடல் நலத்துடன் இருப்பது டாக்டர்களுக்கே வியப்பை ஏற்படுத்தி உள்ளது.

லண்டனை சேர்ந்தவர் பிரயான். இவரது மனைவி அன்னா. இவர்களுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு ஆலிவர் என பெயரிட்டு செல்லமாக வளர்த்து வந்தனர். வழக்கமான பரிசோதனைக்கு சென்ற போது குழந்தையை பரிசோதித்த டாக்டர் குழந்தையின் இதய துடிப்பு சரியாக இல்லை என கூறினார்.


ஆனால் ஆலிவர் மற்ற குழந்தைகளை போல நல்ல உடல் நலத்துடன் இருந்ததால் டாக்டரின் அறிவுரையை பெற்றோர் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. சில நாட்களுக்குப் பின் ஆலிவருக்கு பால் குடிப்பதில் சிரமம் ஏற்பட்டது. தொடர்ந்து மயக்கமான நிலையிலேயே இருந்தான். உடனடியாக குழந்தையை மருத்துவமனையில் சேர்த்தனர். இதய துடிப்பை வழக்கமான நிலைக்கு கொண்டுவர டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர். இதற்கிடையில் ஆலிவருக்கு நான்கு முறை மாரடைப்பு ஏற்பட்டு விட்டது. இருந்தாலும் மற்ற குழந்தைகளைப் போல் நல்ல உடல் நலத்துடன் உள்ளான். சிகிச்சை அளித்த டாக்டர்கள் கூறுகையில் பிறந்த 11 வாரங்களுக்குள் அவனுக்கு நான்கு முறை மாரடைப்பு ஏற்பட்டதை நம்ப முடியவில்லை என்றனர். (அ-5)

# பெங்குவின்களின் கூடமாக மாறும் மண்டேலா சிறை இருந்த தீவு

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா சிறை வைக்கப்பட்ட தீவு அனாதையாகிறது. இத்தீவில் வசித்து வந்த மக்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறி வருகின்றனர்.







தென்னாபிரிக்காவில் கேப்டவுன் நகரில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது ராபன் தீவு. படகு மூலமே இத்தீவுக்கு செல்ல முடியும். அட்லாண்டிக் கடலின் சீற்றத்தில் படகை செலுத்துவது மிகவும் சிரமம் . படகு மூலம் கேப்டவுனுக்கு சென்று தான் அத்தியாவசியப் பொருட்களை வாங்கி வர வேண்டும். ராபன் தீவு 1,500ஆம் ஆண்டுகளில் தென்னாபிரிக்க அரசுகளால் தண்டனை கைதிகள் தங்கும் பகுதியாக விளங்கியது. பின்னர் தொழு நோயாளிகள் தங்க வைக்கப்படும் இடமாக மாறியது. 1962ஆம் ஆண்டுமுதல் அரசியல் கைதிகள் இங்கு சிறை வைக்கப்பட்டனர். இவர்களில் முக்கியமானவர் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா. 27 ஆண்டுகள் சிறை வைக்கப்பட்ட இவர் இத்தீவில் உள்ள சிறையில் 18 ஆண்டுகள் அடைக்கப்பட்டு இருந் தார்.

அவர் விடுதலைக்கு பிறகு இந்த சிறை மியூசியமாக மாற்றப்பட்டது. அதன் பிறகு இத்தீவு மக்கள் பல்வேறு காரணங்களுக்காக கேப்டவுனுக்கு குடிபெயர்ந்து வருகின்றனர். கடந்த ஆண்டு 38 பேர் கேப்டவுனுக்கு சென்று விட்டனர். தற்போது மாஜி சிறை வார்டன்கள் அவர்களது 'குடும்பத்தினர் 112 பேர் மட்டுமே தங்கியுள்ளனர். இவர்களை விட இத் தீவில் கடல்பிராணிகளான பெங்குவின்கள் மற்றும் சீல்களின் எண்ணிக்கை அதிகம் . இத் தீவை நிர்வகிக்க தென்னாபிரிக்க அரசு குறைந்த அளவே நிதி ஒதுக்குகிறது . இங்குள்ள சிறை மியூசியத்தை காணவரும் மக்களின் எண்ணிக்கையும் மிக குறைவு. எனவே தனிமையில் வாழ பிடிக்காமல் மக்கள் வெளி யேறி வருகின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் இத்தீவு மக்கள் நடமாட்டம் இல்லாமல் அனாதைத் தீவாகிவிடும். (அ-5)

# கமலின் 'தசாவதாரம்' படத்தில் கருணாநிதியும் ஜெயலலிதாவும்!

(சென்னை)

கமல் பத்து வேடங்களில் நடிக்கும் தசாவதாரம் படம் நாடெங்கும்பலத்த எதிர்பார்ப்பை கிளப்பியுள்ளது. ஹொலிவுட் படங்களுக்கு சவால் விடும் வகையில் காட்சிகளும் கமலின் வித்தியாசமான வேடங்களும் உருவாக்கப்பட்டுள்ளன. இப்படத்தை கே. எஸ். ரவிக்குமார் இயக்குகிறார் . படப்பிடிப்பு முடிந்து கிராபிக்ஸ் பணிகள் நடக்கின்றன.

பாடல் ஒலி நாடா வெளியீட்டு விழாவையும் பிரமாண்டமாக நடத்த ஏற்பாடுகள் நடக்கிறது. இவ் விழாவுக்கு நடிகர் ஜாக்கிஷானை அழைத்துள்ளனர். அமிதாப்பச்சன், சிரஞ்சீவி, மம்முட்டி உள்ளிட்ட இந்திய முன்னணி நடிகர்களும் பங்கேற்கிறார்கள். இதற்கிடையில் தசாவதாரம் படத்தில் தமிழக அரசியல் தலைவர்கள் தோன்றும் வகையில் சில காட்சிகைளை சேர்க்க முயற்சி நடக்கிறது.

கமலின்பத்து வேடங்களில் ஒரு வேடம் விஞ்ஞானி. இப்பாத்திரத்தில் நடிக்கும் கமல் புதிய கண்டு பிடிப்பை உலகுக்கு அறிமுகம் செய்கிறார். இதற்காக அவருக்கு சென்னை சேப்பாக்கம் மைதானத்தில அமெரிக்கா ஜனாதிபதி ஜார்ஜ்புஷ் முன்னிலையில் பாராட்டு விழா நடப்பது போலவும் அதில் முதலமைச்சர் கருணாநிதி பங்கேற்பது போலவும் காட்சிகள் இணைக்கப்படுகின்றன.

ஜெயலலிதா ஒரு கமலுடன் ஹெலிகாப்டரில் வந்து இறங்குவது போன்ற காட்சியை இணைக்கவும் ஏற்பாடுகள் நடக்கின்றன. இவற்றை எப்படிகாட் சிகளாக எடுத்து சேர்க்கிறார்கள் என்பது ரகசிய மாக வைக்கப்பட்டுள்ளது. விடுதலை சிறுத்தைகள் இயக்க தலைவர் திருமாவளவனின் அனல் பறக்கும் மேடை பேச்சும் இப் படத்தில் இடம்பெறுகிறது. (அ-5)

## உலக தரிசனம்

### ஆபத்தை எதிர்நோக்கும் சீல் மீன்கள்



கனடா நாட்டின்செயின் லாரன்ஸ்கடல் பகுதியில் உள்ள சீல் மீன் இது. இந்த சீல் மீன்களுக்கு விரைவில் ஆபத்து வரப்போகிறது. கனடாவில் சீல் மீன்களை வேட்டையாடும் சீசன் தொடங்கி விட்டது.

இந்த ஆண்டில் மட்டும் 2 இலட்சத்து 75 ஆயிரம் சீல் மீன்களை வேட்டையாடப் போகிறார்களாம். (அ-5)

# 13 மாதக் குழந்தைக்கு முதுமை நோய் ஒவ்வொரு ஆண்டும் ஆறு மடங்கு முதிர்ச்சி

(பிராங்பேர்ட்)

13 மாத குழந்தைக்கு கொடூரமான முதுமை நோய் வந்துள்ளது. 13 ஆண்டுக்கு மேல் உயிர் வாழ்ந்தால் அதன் அதிர்ஷ்டம் என்கின்றனர் நிபுணர்கள்.

ஜெர்மனியை சேர்ந்த செக் பிக்கார் டு என்ற குழந்தைக்கு இந்த நோய் வந்துள்ளது. இந்த நோய்க்கு 'ஹட்சின்சன் கில்போர்டு ப்ரோகேரியா சிண்ட்ரோம்' என்று பெயர் .பிறந்தவுடன் இந்த நோய் ஆரம்பிக்கும். ஒவ்வொரு ஆண்டும் ஆறு முதல் எட்டு மடங்கு வளர்ச்சி ஏற்படும். உடல் வளர்ச்சியுடன் மூளை வளர்ச்சியும் அதிகரிக்கும். ஆறு வயது குழந்தை 30 வயது பெரியவனை போல நடந்து கொள்ளும். பெரியவர்களுக்கு ஈடாக ஜோக் அடிக்கும். வயசுக்கு மீறிய விஷயங்களை பேசும் அறிவுக்கூர்மையும் அதிகமாக இருக்கும்.

ஆனால் இந்த நோய் தாக்கப்பட்ட குழந்தை அதிகபட்சம் 13 வயது வரை தான் உயிர் வாழ முடியும். எட்டு லட்சத்தில் ஒரு குழந்தைக்கு இந்த நோய் வரும். 13ஆவது வயதில் இந்த குழந்தைக்கு 60 வயதானவர்களுக்கு உள்ள முதிர்ச்சி இருக்கும் . மாரடைப்பால் தான் இந்த நோயாளிகள் இறக்கின்றனர். செக் பிக்கார்டு பிறந்து இரண்டு மாதம் இருந்தபோதே பெற்றோருக்கு சந்தேகம் ஏற்பட்டது. டாக்டர்களிடம் காட்டிய போது ஆரம்பத்தில் எதுவும் கண்டு பிடிக்கமுடியவில்லை. சில மாதங்களில் குழந்தையின் நடவடிக் கையை வைத்து மனோதத்துவ டாக்டர்கள் கண்டு பிடித்து முழு பரிசோதனை செய்தனர்.

நோய்பாதிக்கப்பட்ட செக்பிக்கார்டுபெற்றோர் வசதியற்றவர்கள். அதனால் வெப்சைட் மூலம் நன்கொடை திரட்டி வருகின்றனர். உடலை குறைக்க அறுவைசிகிச்சைசெய்தாலும்முதுமை நோயை தடுக்க முடியுமா என்ற கேள்விக்குறி எழுந்துள்ளது. இப்போதே 13 மாதத்தில் 10 வயது சிறுவன் போல பிக்காா்ட்டு தோற்றம் உள்ளது. பெரியவர்களை போல சாப்பிடுகிறான். இந்த நோய் குறித்து நிபுணர்கள் கூறுகையில், இந்த நோய் பற்றி பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு சிகிச்சை என்று எதுவும் கிடையாது . உடல்பருமனை குறைக்க நடவடிக்கை எடுக்கலாம். நோய்க்கு காரணம் 'லாமின்' என்ற புரோட்டீன் தான் உடலில் வளர்ச்சியை அதிகரிக்கிறது. இனி வரும் காலத்தில் இதற்கு சிகிச்சை கண்டுபிடிக்கலாம் என்று கூறினர். (அ-5)

# கிழக்கு மாகாணசபை தேர்தல் இன்று முதல் வேட்பு மனுத்தாக்கல்!

(கொழும்பு)

சுமார் இருபது வருடங்களின் பின்னர் நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் இன்று வியாழக் கிழமை தொடக்கம் ஏற்றுக் கொள்ளப் படவுள்ளன. தேர்தலில் வேட்பாளர் களை நிறுத்துவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகளில் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் தீவிரமாக ஈடு பட்டுள்ளதாகசெய்திகள்தெரிவிக்கின்றன.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக் கான வேட்பாளர்களைத் தெரிவு செய் யும் பணிகளில் அரசியல் கட்சிகள் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள் ளதுடன் கூட் டணிக் கட்சிகளிடையே கருத்தொற் றுமையை ஏற்படுத்தி வேட்பாளர் பட்டியலைத் தயார் செய்யும் பணிக ளில் அக்கட்சிகளும் ஈடுபட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெறவுள்ள கிழக்கு மகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் ஒருவர் 2,000 ரூபா வீதம் கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அறி வித்துள்ளார். வேட்பு மனுக்கள் ஏற் றுக் கொள்ளப் படவுள்ள மட்டக் களப்பு, அம்பாறை மற்றும் திரு கோணமலை மாவட்ட செயலகங்களுக்கு பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித் துள்ளது. (அ-5)

# யுத்தம் தீவிரமடைந்து செல்வதால் சட்ட விரோத குடியேற்றம் அதிகரிப்பு

## ஐ.நா. பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தீவிரமடைந்து செல்லும் யுத்தம் காரணமாக சட்ட விரோத குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவிக்கிறது. அரச படைக ளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1983 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வரும் யுத்தம் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் மக்களை சட்ட விரோத குடியேற்று வதற்கான வாயிலைத் திறந்திருப்ப தாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிட் டுள்ளது.

இதன் காரணமாக நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகள் பெரும் நெருக் கடியை எதிர்நோக்கியிருப்பதாக தெற் காசியாவில் இயங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல் களைக் கண்காணிக்கும் அலுவல கப்பிரதிநிதி 'கிரேக் லூயிஸ்' தெரி வித் திருப்பதாக றொய்ட்டர்செய்தி தெரி விக் கின்றது.

சட்ட விரோத குடியேற்ற நடவடிக் கைகளில் ஈடுபடுவோரும் சட்ட விரோ தமாக குடியேற முயற்சிப் போரும் வெளிநாடுகளுக்குச் செல்வதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதா கவும் அவர் தெரிவித்தார். குடும்பத் தில் இருந்து ஒரு சிறுவன் பிளவு படுவதற்கான சூழ்நிலை உருவா கும் போது தன்னை நேசிப்பவர் களையும் பராமரிப்பவர்களையும் பிரிந்து வாழ வேண்டிய இக்கட்டான நிலை ஏற்படுவதாகவும் அவர் தெரி வித்துள்ளார். (அ-7)

# இஸ்ரேல்-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கு மிடையில் கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் கல்வி தொடர்பான விடயங் களில் பரஸ்பர ஒத்துழைப்புக்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்ப ட்டதாக ஜனாதிபதி செயலகம் அறி வித்துள்ளது.

இஸ்ரேலுக்கு நான்கு நாள் உத் தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற் கொண்டுள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இந்த ஒப்பந்தத் தில் கைச்சாத்திட்டார். இஸ்ரேலின் உதவிப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான ரிஸிப்பி லிவ்னி இஸ்ரேல் சார்பில் கைச்சாத்திட்டார்.

இதேவேளை இஸ்ரேல் ஜனாதி பதி சைமன் பெரொஸ், பிரதமர் எகுட் ஒல்மட் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் எகுட் பராக் ஆகியோருடனும் பிரத மர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடத்தி னார்.

பாலஸ்தீன் மேற்குக் கரைப் பிர தேசத்துக்கு விஜயம் செய்யவுள்ள பிரதமர் பாலஸ்தீன் தலைவர் மஹ் மூத் அப்பாஸுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

## குழு மோதலில் மாணவர் ஒருவர் கொலை

றாகம வெலிப்பில்லாவ பகுதி யில்கூரிய ஆயுதமொன்றினால்தாக் கப்பட்டுபாடசாலைமாணவர்கொலை செய்யப்பட்டுள்ளார். இரண்டு மாண வர் குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பிரச் சினை இந்தக் கொலைக்குப் பின்ன ணியாக அமைந்ததென பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொல்லப்பட்ட வர் கொஸ்கின்ன பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய மாணவரென அடை யாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒரு வரைக் கைது செய்ததாக பொலி ஸார் தெரிவித்தனர். (அ-6)

## மின்மானிகளின் இறக்குமதி நிறுத்தம்

வெளிநாடுகளிலிருந்துமின்மானி கள் இறக்குமதி செய்யப்படுவதை இலங்கைமின்சார சபை நிறுத்தியுள் ளது. உள்ளூரில் மின்மானிகளை தயாரிக்கும் நோக்கில் இந்த தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சாரசபையின் பொது முகாமை யாளர் ரி. ஆர். புள்ளே பெரும கூறி யுள்ளார். மின்மானிகளை வெளி நாடுகளிலிருந்து இறக் குமதி செய்ய வேண்டாமென எரிசக்தி மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளதாக குறிப் பிட்ட அவர், எதிர் காலத்தில் உள்ளூ ரிலேயே மின் மானிகளை தயாரிப் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.

மின்மானிகளுக்குத் தேவை யான பாகங்களை மாத்திரம் வெளி நாடு களிலிருந்து தருவித்து அவற் றைக் கொண்டு மின்மானிகள் இங்கு-தயாரிக்கப்படவுள்ளன. இத னைக் கிரமமாக செய்வதன் மூலம் எதிர் காலத்தில் மின்மானி களுக்குத் தட்டுப்பாடுஏற்படாதுஎனமின்சாரசபை யின் பொது முகாமையாளர் கூறி யுள்ளார். (அ-6)


CARITAS-HUDEC

# கரித்தாஸ் - கியூடெக்

## பருத்தித்துறை சுனாமி நிவாரண நிரந்தர வீடமைப்புத் திட்டத்திற்கான கட்டடப் பொருட்களுக்குரிய கூறுவிலை கோரல்

கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கான கூறு விலைகள் பொருத்தமான வழங்குனர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இவ் வழங்கல்களுக்காக கூறுவிலை கோரும் விண்ணப்பப் படிவத்தினை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக் கேற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 01.04.2008 திகதி முற் பகல் 10மணிக்கு முன்னர் எமது அலுவலகத்திற்கு கிடைக்கக் கூடியதாக 'இயக்குநர், கரித்தாஸ் -கியூடெக் யாழ்ப்பாணம்' என பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது நேரடியாகவோ கையளிக்கவும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'கட்டடப்பொருட்கள் வழங்கலுக்கான கூறுவிலை' என எழுதப்பட்டிருக்க வேண்டும்.

| பொருட்களின் விபரம் | தொகை |
|---|---|
| கதவு நிலைகள் | 525 தனி |
| கதவுகள் | 525 தனி |
| யன்னல் நிலைகள் | 525 தனி |
| யன்னல் கதவுகள் | 525 தனி |
| முறுக்குக் கம்பிகள்(10mm) | 5600 தனி |
| மென் இரும்பு(5.5mm) | 3000தனி |
| கட்டுக் கம்பி | 300 Kg |


இயக்குனர்
கரித்தாஸ் -கியூடெக்
14, மத்தியூஸ் வீதி,
தியோகு தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/935)


# நிகழ்வுப் பதிவுகள்



பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் விளையாட்டு தலைவனிடம் ஒலிம்பிக் தீபத்தை கையளித்து போட்டியினை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் பாடசாலை அதிபர் அ.சா. அரியகுமார் மற்றும் விளையாட்டு ஆசிரியர் வி.கோபிநாத் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.



காரைநகர் வியாவில் சைவ வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட காரை நகர் அபிவிருத்திச் சபைத்தலைவர் வே. குமா ரசாமி வெற்றியீட்டிய மாணவனுக்கு கேடயம் வழங்கிக் கௌரவிப்பதையும் அருகில் அதிபர் குமரேசமூர்த்தி நிற்பதனையும் படத்தில் காணலாம்.



சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட ஓய்வு பெற்ற அதிபர் ப. இரத்தினசபாபதி உரையாற்றுவதையும் கலந்துகொண்ட ஆசிரியர்களையும் படத்தில் காண லாம்.



மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்லமெய் வல்லு நர் போட்டியினை அதிபர் கு. இராசநாயகம் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைப் பதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தெல்லிப்பழை கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் ச. கைலாசநாதன். இலங்கை வங்கி காங்கேசன்துறை கிளை முகாமையாளர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.



வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட குடத்தனை தென் இந்திய திருச்சபை குரு அருட் திரு ராஜன் றொகான் உரையாற்றுவதையும் அருகில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் என். கணேசமூர்த்தி மற்றும் பாடசாலை அதிபர் பொ. சிவ ராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# வடக்கில் குவியும் இராணுவத்தின் பலம்

வடமற்றும் வன்னிப் போர்முனையில் மோதல்கள் நீடித்து செல்கையில் இலங்கையின் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா திடீரென இந்தியாவுக்கு சென்று வந்துள்ளமை பல கேள்விகளை எழுப்பியுள்ளது. இந்தியாவில் இருந்து திரும்பிய இராணுவத் தளபதி உடனடியாக வவுனியாவுக்கு சென்றதும் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது.

இலங்கை அரசை பொறுத்தவரை படைத்துறை உதவிகள் மற்றும் விடுதலைப்புலிகள் மீதான அழுத்தங்களை ஏற்படுத்தும் முகமாகவே இந்தியாவை நாடுவதுண்டு. எனவே வடபோர் முனையில் மோசமடைந்துவரும் மோதல்களை தொடர்ந்து படைத்துறை ஒத்துழைப்புக்களை பெறும் முகமாக இராணுவத்தளபதியின் விஜயம் அமைந்திருக்கலாம் என்ற கருத்துக்களும் பலமாக எழுந்துள்ளன.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் படை அதிகாரிகளுக்கும், படையினருக்கும் தமது நாடுகளுக்கான நுளைவு அனுமதி வழங்குவதைத் நிறுத்துவது குறித்து கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் சிந்தித்து வருகையில் இலங்கைப் படையினருடன் இந்தியா காட்டிவரும் அதிக ஒத்துழைப்புக்கள் தமிழ் மக்கள் மத்தியில் பாரிய மனக்கசப்பை ஏற்படுத்தி வருகின்றது என்பதை யாரும் மறுத்துவிடமுடியாது.

இந்த நிலையில் கடந்த வாரம் வவுனியாவுக்கு பயணம் மேற்கொண்ட சரத்பொன்சேகா வன்னி மீதான படை நடவடிக்கைகளை வழி நடத்திவரும் வவுனியா மாவட்ட கட்டளைத்தளபதியான மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா மற்றும் 56,57,58,59 ஆவது படை யணிகளின் கட்டளை அதிகாரிகள், களமுனைத் தளபதிகளைச் சந்தித்து புதிய உத்திகள் குறித்து ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் வன்னியில் பெய்துவரும் கடும் மழை காரணமாக கடந்த வாரம் படை நடவடிக்கைகள் மிகவும் மந்தமானதாகவே காணப்பட்டன.

பெய்துவரும் கனமழை காரணமாக இராணுவத்தினரின் கனரக வாகனங்களைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், குறிப்பாக தாக்குதலுக்கு உதவியாக ரீ-55 ரக கள முன்னணி டாங்கிகளையோ அல்லது காயமடையும் படையினரை நகர்த்தும் துருப்புக்காவி கவச வாகனங்களையோ பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதனால் படை நடவடிக்கை பாதிப்பு அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனிடையே வன்னி களமுனையில் மூன்று டிவிசன் படையினர் திறந்துள்ள மூன்று களமுனைகளின் மீதான விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல் வலிமையைக் குறைக்கும் நோக்குடன் யாழ்.குடாநாட்டின் தென்முனையான கிளாலி, முகமாலை,நாகர்கோவில் அச்சில் தமது அடுத்த களமுனையை திறப்பதற்கு இராணுவத்தினர் தயாராகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கவசத் தாக்குதல் படையணி

இதற்காக கனரக கவச வாகனங்களும், ஆயுதங்களும் யாழ்.குடாநாட்டின் தென்முனை நோக்கிநகர்த்தப்படுவதாக அப் பகுதி தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை இராணுவத்தில் அண்மையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள கவசத் தாக்குதல் படையணியினர் இந்த களமுனையில் முக்கிய பங்காற்றுவார்கள் எனவும் படை அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

ஏற்கனவே மன்னார் மற்றும் மணலாறு களமுனைகளில் கவசத்தாக்குதல் படையணியினரின் சில பிரிவுகள் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றபோதும், ஆனையிறவை நோக்கிய படை நடவடிக்கையிலேயே அதன் பயன்பாடுகள் அதிகம் இருக்கும் என நம்பப்படுகின்றது. இதற்கு அந்த கள முனையின் பூகோள அமைப்பு மற்றும் 2001 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தீச்சுவாலை படைநடவடிக்கையில், படையினருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் என்பன முக்கிய காரணம்.

ஆனால், விடுதலைப்புலிகள் கிளாலி, முகமாலை,நாகர்கோவில் பகுதிகளில் உள்ள தமது முன்னரங்க நிலைக்கும் இரண்டாவது பாதுகாப்பு அரண்களுக்கும் இடையில் பாரிய பொறிக் கிடங்குகளை அமைத்து வருவதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிப்பதாக படையினரின் புலனாய்வுத் துறை எச்சரித்துள்ளது. கவசத் தாக்குதல் படையினரின் கவச வாகனங்களையும், டாங்கிகளையும் இலகுவாக கைப்பற்றும் நோக்கத்துடன் விடுதலைப்புலிகள் இதனை மேற்கொண்டு வருவதாகவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முகமாலையில் நடைபெற்ற சமரின் போது படையினர் ஏறத்தாழ ஒரு டசின் கவச வாகனங்களையும், டாங்கிகளையும் இழந்திருந்தனர். இந்த சம்பவத்திலும் இரு டாங்கிகள் பொறிக் கிடங்கினுள்வீழ்ந்து அழிந்துபோனமை குறிப்பிடத்தக்கது.

வன்னிக் களமுனையை பொறுத்தவரையில் இராணுவத்தினரின் முன் நகர்வுகள் விடுதலைப் புலிகளின் பதில்தாக்குதல் உத்திகளுக்கு அதிகம் முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், அவர்கள் வகுத்துக் கொண்ட உத்திகளும் பாரிய வெற்றிடத்தை தோற்றுவித்துள்ளதாக படைத்தரப்பு தற்போது உணரத் தலைப்பட்டுள்ளது. அதாவது 1997 முதல் 1999 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற வெற்றி உறுதி படை நடவடிக்கையின் போதும் இராணுவத்தின் 53, 55, 56 ஆகிய மூன்று டிவிசன்கள் ஏ-9 வீதியூடாக ஓமந்தையில் இருந்து நகர்வை மேற்கொண்டபோது, 54 ஆவது டிவிசன் ஆனையிறவில் இருந்து முன்நகர்ந்து கிளிநொச்சி யுடன் நின்று கொண்டது.



அதற்கான காரணங்களும் உண்டு. அதாவது முன்நகரும் படையினர் கைப்பற்றும் பிரதேசங்களை தக்கவைப்பது முக்கியமானது எனவும், அவ்வாறு தக்கவைப்பதற்கு கைப்பற்றும் போது பயன்படுத்தப்பட்ட படைவளங் களை விட அதிக வளங்கள் தேவை என்றும் அன்று கருதப்பட்டது. எனவேதான் ஒருமுனையால் மூன்று டிவிசன் படையினர் நகர்த்தப்பட்டதுடன், கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை தக்கவைப்பதற்கு காவல் துறையினர், கடற்படையினர் வான்படையினர் ஆகியோர் பெருமளவில் பயன்படுத்தப் பட்டு வந்தனர். எனினும் இறுதியில் வன்னியை தக்கவைப்பது முடியாத காரியம் என்பதை ஓயாத அலைகள் மூன்று உணர்த்தியிருந்தது.

ஆனால், தற்போதைய படை நடவடிக்கைகள் முற்றிலும் வேறுபட்டவை. அதாவது பல முனைகளில் ஒவ்வொரு டிவிசன் படையினரை நகர்த்துவதன் மூலம் களமுனைகளை பலவீன மாக்கி விடுதலைப்புலிகளின் பலத்தை சிதைத்துவிடலாம் என்ற உத்திகள் படையினரால் பின்பற்றப்பட்டு வரப்படுகின்றது.

### கைப்பற்றும் பிரதேசங்களை தக்கவைப்பது எப்படி?

ஆனால், முன்நகரும் படையினர் கைப்பற்றும் பிரதேசங்களை தக்கவைப்பது எப்படி என்ற கேள்விக்கான விடை வெற்றிடமாகவே உள்ளது. மேலும் விடுதலைப்புலிகள் தமது உத்திகளை மாற்றி அமைத்து நேரடியற்ற மோதல்களை தவிர்த்து வருவதும், பொறிவெடிகள், மிதிவெடிகள், எறிகணைவீச்சுக்கள், சினைப்பர் தாக்குதல்களை அதிகரித்து வருவதும் படையினரின் திட்டங்களுக்கு தடையாக உள்ளது.

பல களமுனைகளை திறக்கும் போது படையினர் வகுத்த திட்டம் என்னவெனில், விடுதலைப் புலிகளின் பலத்தை சிதைத்துவிட்டால் கைப்பற்றப்பட்ட இடங்களைத் தக்கவைப்பதற்கு அதிக படையினர் தேவையில்லை என்பதாகும். ஆனால், விடுதலைப்புலிகள் தமது உத்திகளை மாற்றியமைத்து, தமது வளங்களை தக்கவைத் துக்கொள்வது, படையினரின் திட்டங்களை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. எனவேதான் விடுதலைப்புலிகள் 'செய் அல்லது செத்துமடி' போன்ற பெரும் எடுப்பிலான வலிந்த தாக்குதல்களை நடத்தாத போதும் மடுநோக்கிய படை நடவடிக்கையை ஒரு வருடம் கடந்த நிலையிலும் இருக்கை அடையவிடாது தடுத்துள்ளனர்.

### சிறப்பு அதிரடிப்படையினரின் மணலாறு நோக்கிய நகர்வு

தற்போது வடபோர் முனையின் உக்கிரத்தை உணர்ந்துகொண்ட படைத்தரப்பு அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பாக இருந்த சிறப்பு அதிரடிப் படையினரை மணலாறு களமுனையை நோக்கி நகர்த்த திட்டமிட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் 40 முகாம்களில் உள்ள சிறப்பு அதிரடிப் படையினரும், வவுனியா மற்றும் மன்னார் நகர் பகுதிகளில் உள்ள சிறிய அளவிலான சிறப்பு அதிரடிப்படையினரும் இந்தப் பகுதிக்கு நகர்த்தப்படவுள்ளனர். குறிப்பாக மணலாறு, கெப்பிட்டிகொல்லாவ பகுதிகளில் எல்லைப்புறங்களின் பாதுகாப்பு இவர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தி அரசு தற்போது மாகாண சபை தேர்தல்களை நடத்த திட்டமிட்டுள்ள நிலை யில் சிறப்பு அதிரடிப் படையினரை வடக்கு கிழக் கின் எல்லைக்கோட்டை நோக்கி நகர்த்துவது கவனிக்கத்தக்கது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபை தேர்தலில் அதிக குழப்பங்கள் நிகழாததால் கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு உறுதியாக உள்ளதாக நம்பும் அரசு, கிழக்கு மாகாணத்திற்கு விடுதலைப்புலிகள் ஊடுருவும் பாதை என சந்தேகிக்கப்படும் மணலாற்றுப் பகுதியின் பாதுகாப்பை பலப்படுத்துவதன் மூலம் கிழக்கின் பாதுகாப்பை முற்றாகப் பேணமுடியும் என எண்ணுகிறது. எனவேதான சிறப்பு அதிரடிப் படையினர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதாவது கிழக்கில் ஊடுருவியுள்ள விடுதலைப்புலிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதை விட, அவர்கள் ஊடுருவும் பாதை யை அடைத்துவிடுவது மிகவும் பாதுகாப்பானது என படைத்தரப்பு எண்ணியுள்ளதாலேயே வடக்கு நோக்கி படை பலங்கள் செறிவாக்கப் படுகின்றன என்பன தெளிவானது.

### வேல்ஸிலிருந்து அருஷ்

ஆனால், இந்தத்திட்டத்தின் எதிர்விளைவுகள் என்ன என்பதையும் விடுதலைப்புலிகள் வழங்கப் போகும் எதிர் உத்திகள் என்ன என்பதையும் சிறப்பு அதிரடிப்படையினர் வன்னிபோர் முனைக்கு ஏற்றவர்களா என்பதையும் எதிர்காலம் தான் சொல்லமுடியும்.

## ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை

# பல சடலங்கள் இரத்தவெள்ளத்தில் கிடந்தன

## மூதூர் பிரதேச சபை உறுப்பினர் சாட்சியம்

வீதியால் சென்றுகொண்டிருந்த மூதூர் வாசி ஒருவர் தலையை அசைத்து, கையை க் காட்டி ஏதோ சொல்வதற்கு முற்பட்டவாறே சென்று கொண்டிருந்தார். அவர் காட்டிய திசையில் அக்ஷன் பெய்ம் தொண்டு நிறுவன அலுவலகம் இருந்தது.

அதன் பக்கமாகச் சென்று பார்த்தபோது அங்கு பல சடலங்கள் இரத்த வெள்ளத்தில் கிடந்தன. அத்துடன், அவ் அலுவலக வளாகமும் அலங் கோலமாக காணப்பட்டது என அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் 17 பேர் படு கொலை செய்யப்பட்டது தொடர்பான ஜனாதி பதி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த மூதூர் பிரதேசசபை உறுப்பினர் மொஹமட் சாலிஹு ராஜீஸ் தெரிவித்தார். ஊழியர்கள் 17பேரின் சடலங்கள் இருந்த இடத்திலிருந்து வீசிய துர்நாற்றம் அவர்கள் சுமார் 24 மணித்தியாலங்களுக்கு முன்னதாகவே கொல்லப்பட்டிருக்கலாம் என்ற தீர்மானத்திற்கு என்னை இட்டுச் சென்றது என்றும் அவர் கூறினார்.

கடந்த 2006 ஆகஸ்ட் 5 ஆம் திகதி திருகோணமலை மூதூரில் வைத்து அக்ஷன் பெய்ம் அரச சார்பற்ற தொண்டு நிறுவன ஊழியர்கள் 17பேர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு விசாரணைகள் இடம்பெற்று வருகின் றன. இதன் விசாரணைகள் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப ரெஸ்டோரண்ட் ஹோலில் இடம்பெற்றது. இதன்போது சாட்சியமளிக்கையிலேயே மூதூர் பிரதேச சபை உறுப்பினர் மொஹமட் சாலிஹு ராஜீஸ் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு வின் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோத்தாகொடவினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தொடர்ந்து பதில் அளித்த அவர் மேலும் கூறியதாவது,

மூதூரிலுள்ள அப்துல்காசிம் வீதிக்கு அருகாக அக்ஷன் பெய்ம் தொண்டு நிறுவன அலுவலகம் அமைந்திருக்கின்றது. அவ்வலுவலகத்திற்கு பின்புறமாக சுமார் 70 மீற்றர் தொலைவிலேயே எனது வீடும் இருக்கின்றது. சம்பவ தினமான 2006 ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் மூதூர் பிரதான வீதி வழியாகச் சென்று அப்துல் காசிம் வீதியை ஊடறுத்துச் சென்று கொண்டிருந்தேன். அன்றைய காலகட்டத்தில் மூதூரில் நில விய அசாதாரண சூழ்நிலைகளால் அங்கிருந்த மக்களில் அநேகமானோர் இடம்பெயர்ந்திருந் தனர். இன்னும் ஒரு பகுதியினர் அகதி முகாம் களிலும் ஏனையோர் தங்களது வீடுகளிலும் முடங்கிக் கிடந்தனர்.

பிரதேச சபை உறுப்பினர் என்ற வகையில் அவர்களது தேவைகள் குறித்து அறிந்து, அதனைப் பூர்த்தி செய்ய வேண்டியது எனது கடமையாகும். இந்த நோக்கத்திலேயே அப் பகுதிக்குச் சென்றேன். அன்றைய நிலையும் மிக மோசமாகவே இருந்தது. மூதூர் நகரத்திலும் மற்றும் உட்புறங்களிலும் இராணுவத் தினர் குவிக்கப்பட்டிருந்தனர். சனநட மாட்டம் இருக்கின்ற இடத்தைத் தவிர வேறு இடங்க ளுக்குச் செல்லவேண்டாம் என இரா ணுவத் தினரால் எனக்கு பணிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் அப்துல் காசிம் வீதியில் சென்றுகொண்டிருந்த போது அவ் வழியே மூதூரைச் சோந்த ஒருவர் சென்று கொண்டிருந்தார். அவரை நெருங்கிய போது தலையை அசைத்து அக்ஷன் பெய்ம் அலுவலகப் பக்கமாக கையை காட்டி ஏதோ கூறுவதற்கு முற்பட்டார். ஆனாலும் ஒன்றும் சொல்லவில் லை. அவரது செய்கையினூடாக ஏதோ வொன்று நடந்திருப்பதை என்னால் ஊகித்துக்கொள்ளமுடிந்தது.

அந் நபர் எனக்கு காட்டிய பக்கத்தை நோக்கியபோது, அக்ஷன்பெய்ம் அலுவலகக் கட்டடப் பகுதியில் காகங்கள் பறந்துகொண் டிருந்ததை அவதானித்தேன். பின்னர் அவ் விடத்திற்குச் சென்று மதிலின் மேலாக பார்த்த போது அங்கு இரத்தவெள்ளத்தில் பல சடலங்கள் கிடந்தன. அத்துடன், துர்நாற்றமும் வீசியது. அதில் ஒருசில சடலங்கள் அக்ஷன் பெய்ம் தொண்டுநிறுவன ரீ-சேட்டுடன் காணப்பட்டன. குறித்த அலுவலகத்தில் தமிழ் இளைஞர்கள் 17பேர் தங்கியிருந்ததையும் அவர்கள் அக்ஷன் பெய்ம் தொண்டு நிறுவன ஊழியர்கள் என்பதையும் ஏற்கனவே அறிந்திருந்தேன்.

எனவே, கொல்லப்பட்டுள்ள அனைவரும் அக்ஷன் பெய்ம் ஊழியர்கள் தான் என்ற முடிவுக்கு வந்தேன். இருப்பினும், இரத்த வெள்ளத்தில் கிடந்தாலும் சம்பவ இடத்திலிருந்து உடனடியாக நான் வந்துவிட்டாலும் அச் சடலங்களை அடையாளம் காண்பதற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை. மேலும், அங்கு எத்தனை சடலங்கள் கிடந்தன என்பதை எண்ணிப் பார்க்கவும் இல்லை. ஆனாலும், சடலங்கள் அவமரியாதைக்குட்படுத்தப்பட்டிருந்தன. அவ்விடத்தில் பொலிஸாரோ, இராணுவத்தினரோ யாரும் இருக்கவில்லை. எவ்வித பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருக்கவில்லை. உடனடியாக அவ்விடத்தை விட்டு புறப்பட்டு விட்டேன்.

இச் சந்தர்ப்பத்தில் மூதூர் பிரதேசத்தில் குவிக்கப்பட்டிருந்த முப்படையினரும் சீருடையில் இருக்கவில்லை. பொதுவாக மோதல்கள் இடம்பெறுகின்ற வேளையில் இராணுவத் தினர் அனைவரும் சீருடையில் இருப்பதில் லை என அவர் தெரிவித்தார். (அ-5)


# 341 ஓட்டங்கள் எடுத்தால் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி

## 9 விக்கெற்றுக்கள் கைவசம் உள்ளது

(ஹயானா)

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 437 ஓட்டங்களை நிர்ணயித்தது இலங்கை அணி.

இந்நிலையில் தனது இரண்டாவது இன்



வர்ணபுர

னிங்ஸில் துடுப்பெடுத்தாடும் மேற்கிந்திய தீவுகள் அணி நேற்று முந்தினம் நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெற்றை மாத்திரம் இழந்து 96 ஓட்டங்களை பெற்றிருந்தது.

மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரின் முதலாவது போட்டி கடந்த 22ஆம் திகதி முதல் ஹயான்னாவில் நடைபெற்று வருகிறது.

இப்போட்டியில்நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி அதன் முதல் இன்னிங்ஸில் 8விக்கெற்றுக்களை இழந்து 476 ஓட்டங்களை எடுத்த போது ஆட்டத்தை இடைநிறுத்தி மேற்கிந்திய தீவுகளை துடுப்பெடுத்தாட அழைத்தது.

துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன 136 ஓட்டங்களையும் மலிந்த வர்ணபுர 120 ஓட்டங்களையும் வாஸ் 54 ஓட்டங்களையும் வாண்டொட் 52 மற்றும் சங்கக்கார 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர் 4 விக்கெற்றுக்களையும் ஹைல் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 3ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 9விக்கெற்றுக்களை இழந்து 269 ஓட்டங்களை பெற்றிருந்தது.

4ஆம் நாளான நேற்று முன்தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 280 ஓட்டங்களைப்பெற்றது.

இதில் சர்வான் 80 ஓட்டங்களையும் ராம்டீன் 38 ஓட்டங்களையும் ஹைன்ட்ஸ் 37 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வாஸ் , மிரான்டோ மற்றும் முரளிதரன் ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 196ஓட்டங்களால் முன்னிலைவகித்த இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 7 விக்கெற்றுக்களை இழந்து 240ஓட்டங்களை பெற்றநிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தி மேற்கிந்திய தீவுகள் அணிக்கு வெற்றி இழக்காக 437 ஓட்டங்களை நிர்ணயித்தது.

துடுப்பாட்டத்தில் மலிந்த வர்ணபுர 62 ஓட்டங்களையும் திலான் சமரவீர ஆட்டமிழக்காமல் 56 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பென் 3 விக்கெற்றுக்களையும் பிரவோ 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 437 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்திய தீவுகள் அணி நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் ஒரு விக்கெற்றை மாத்திரம் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் பிரவோ 46 ஓட்டங்களையும் சர்வான் 34 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

ஆட்டத்தின் 5ஆவது இறுதியுமான போட்டி நேற்று (இலங்கை நேரப்படி இரவு) 9.

90 ஓவர்களில் 341 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் மேற்கிந்திய தீவுகள் அணி துடுப்பெடுத்தாடி வருகின்றது. (5)

# ஐ.சி.எல். ,ஐ.பி.எல். இடையே மோதல் இன்சமாம் யோசனை

(புதுடில்லி)

இந்திய கிரிக்கெற் லீக்கிற்கும் இந்திய பிரீமியர் லீக்கிற்கும் இடையே போட்டா போட்டி காணப்படும் நிலையில் இரு அணிகளும் களத்தில் மோதிக்கொள்ளலாம் என்ற யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

ஐ.சி.எல்.லின் லாகூர் பாட்ஷா அணியின் தலைவரும் முன்னாள் பாகிஸ்தான் கிரிக் கெற் அணியின் தலைவருமான இன்சமாம் உல்ஹக் இந்த யோசனையை முன்வைத் துள்ளார். இன்சமா மின் யோசனைக்கு ஐ.சி.எல். லின் தலைவர் கபில் தேவ் ஆதரவு தெரிவித்துள்ளார். இந்த யோசனை கிரிக்கெற் மேம்பாட்டிற்கு உதவும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐ.சி.எல் மற்றும் ஐ.பி.எல். போட்டிகளில் வெற்றிபெறும் அணிகளுக்கு இடையே டெஸ்ட் ஓவ் திரீ போட்டிகளை நடத்தலாம் என்று இன்சமாம் முன்பு கூறியிருந்தார். ஐ.சி.எல் யும் ஐ.பி.எல். யும் எதிரிகளாக தாம் கருதவில்லை என்றும் இரு அணிகளுமே கிரிக்கெற்றை வளர்க்க உருவான அமைப்புகள் என்றும்அவர்கூறியிருந்தார்.

ஆனால் இந்த யோசனையை ஏற்க ஐ.பி.எல். நிர்வாகிகள் மறுத்து விட்டனர். ஐ.சி. எல்லை தங்களுக்கு போட்டியாக கருதவில்லை என்று ஐ.பி.எல் .தலைவர் லலித் மோடிகூறியுள்ளார். (5)

# மூன்றாவது டெஸ்ட்டில் வென்று தொடரை சுவீகரித்தது இங்கிலாந்து

## சொந்த மண்ணில் ஏமாந்தது நியூசிலாந்து

(நேபியர்)

மூன்றாவது டெஸ்ட் போட்டியில் 121 ஓட்டங்களால் தேல்வியடைந்து நியூசிலாந்து அணி சொந்த மண்ணில் தொடரை இழந்தது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இங்கிலாந்து அணி 2 இருபது- 20 5ஒரு நாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட்



போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இத்தொடரில் முதல் நடைபெற்ற இருபது - 20 தொடரை இங்கிலாந்து அணி 2:0 என்ற கணக்கில்வெற்றிபெற்றதுடன்ஒருநாள்தொடரை நியூசிலாந்து அணி 3:1 என்ற கணக்கில் சுவீகரித்தது. இதனை தொடர்ந்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. இதில் முதல் நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு போட்டி யில் வெற்றிபெற்று சமனிநிலை பெற்றது.

இந்நிலையில் தீர்க்கமான 3 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த 22 ஆம் திகதி முதல் நேபியரில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப் பெடுத்தாடிய இங்கிலாந்து அணி அதன் முதல் இன் னிங்ஸில் சகல விக்கெட்டுக் களை யுமி ழந்து 253 ஓட்டங்களை எடுத் தது.

இதில் பீற்றர்சன் 129 ஓட்டங்களையும் பிரோட் 42 ஓட்டங்களையும் மற்றும் ஹொலின் வூட் 30ஓட்டங்களையும்எடுத்தனர்.

பந்து வீச்சில் சௌத்தி 5 விக்கெற்றுக்களையும் மார்டீன், பட்டீல் ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

பதி லுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 168 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. இதில் பிளமிங் 59 ஓட்டங்களையும் ஹவ் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் சயிட்பொத்தம் 7 விக்கெற்றுக்களையும் பிரோட் 3 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸ்ஸில் நியூசிலாந்து அணியை விட 85 ஓட்டங்களால் முன்னிலை வகித்த இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 7 விக்கெற்றுக்களையிழந்து 431ஓட்டங்களை



எடுத்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தி நியூசிலாந்து அணிக்கு வெற்றி இலக்காக 553 ஓட்டங்களை நிர்ணயித்தது. இதில் ஸ்ரெராஸ் 177 ஓட்டங்களையும் பெல் 110 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் விக் டோரி 4 விக்கெற்றுக்களையும் பட்டீல் 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர் .

தொடர்ந்து 553 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலம இலக்குடன் தனது இரண்டாவது இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் 4 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 5விக்கெற்றுக்களையிழந்து 222 ஓட்டகளைப் பெற்றிருந்தது.

ஐந்தாவதும் இறுதி நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து சௌத்தி அதிரடியாக ஆடியபோதும் பனீசரின் துல்லியமான சுழலில் சகல விக்கெற்றுக் களையும் இழந்து 431ஒட்டங்களை மாத்திர மெடுத்து 121 ஓட்டங்களால் தோல்வியடைந் தது. இதன் மூலம் சொந்த மண்ணில் நியூ சிலாந்து3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:2 என்ற கணக்கில் இழந்தது.

இதில் தனது முதலாவது டெஸ்டில் ஆடிய ஆரம்ப பந்துவீச்சாளர் சௌத்தி ஆட்டமிழக்காமல் 40 பந்துகளை மாத்திரம் எதிர் கொண்டு (9சிக்சர்கள் , 4பௌவுண்டரிகள் உட்பட) 77 ஓட்டங்களையும், ரெய்லர் 74 ஓட் டங் களையும் பெல் 69, பிளமிங் 66, விக்ரேரி 43 மற்றும் மக்குலம் 42 ஒட்டங்களையும் எடுத்த னர்.

பந்துவீச்சில் பனீசர் 6 விக்கெற்றுக் களையும் பிரேட் 2 விக்கெற்றுக்களையும் சையிட் பொத்தம், அண்டர்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் நாயகனாகவும் இங்கிலாந்து அணி வேகப்பந்து வீச்சாளர் சையிட்பொத்தம் தெரிவானார். (5)

## துடுப்பாட்டத்தில் அசத்தல்

# தென்னாபிரிக்கா வலுவான ஆரம்பம்

(சென்னை)

முதல்தர வரிசை துடுப்பாட்ட வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தால் இந்தியாவுடனான முதலாவது டெஸ்டில் தென்னாபிரிக்க அணி முதல்நாள் ஆட்டநேர முடிபில்அதன் முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையிலுள்ளது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இத் தொடரின் முதலாவது போட்டி நேற்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத் துடுப்பாட்ட



வீரர்களான அணித்தலைவர் சிமித் மற்றும் மக்கன்சியின் சிறப்பான ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டத்தின் மூலம் நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை இழந்து 304 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் நீல் மக்கன்சி 94 ஓட்டங்களையும் அணித்தலைவர் சிமித் 73 ஓட்டங்களையும் பிறின்ஸ் 23, கலிஸ் 13 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததுடன் சிறப்பாக ஆடிவரும் அம்லா 85 ஓட்டங்களுடனும் டி வில்லியர்ஸ் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் கும்ளே, ஹர்பஜன் சிங் ஆகியோர்தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும். (5)

உலகம் ஒரு தொட்டில் அல்ல என்பதை அனுபவம் நமக்குக் கற்பிக்கிறது.

-ப்ராய்டு

வலம்புரி

# தென்னாபிரிக்கா உணர்ந்த யதார்த்தம் இலங்கை அரசுக்கு புரிவது எப்போது?

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என தென்னாபிரிக்க அமைச்சர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அமைச்சர் ஒருவர் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் விளங்கிக் கொண்ட யதார்த்தத்தை இலங்கை அரசால் இன்னமும் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பது வேதனை தருவதாகும்.

பிரச்சினை ஒன்றாக இருக்க இலங்கை அரசின் அணுகுமுறை வேறொன்றாகவுள்ளது. அரசின் இந்த அணுகுமுறையை முப்பரிமாணத்தில் நோக்க முடியும்.

அவை,

(I) வடக்கில் யுத்தத்தை நடத்தி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியை மீட்டு எடுத்தல்.

(II) கிழக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துதல்.

(III) தமிழர் தரப்புப் பங்கேற்காத சர்வகட்சிக் குழு முன்வைக்கும் 13-வது திருத்தச் சட்ட மூலத்தை அமுல் படுத்துவதெனக் கூறி சர்வதேச அழுத்தத்தைக் குறைத்தல்.

இந்த மூன்று வழிகளில் இலங்கை அரசு இனப்பிரச்சினையை நகர்த்திச் செல்ல முற்படுகின்றது.

அரசின் இந்த முப்பரிமாண நகர்வு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாக நிலைமையை மேலும் மோசமாக்கும் என்பதே யதார்த்தம்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி விட்டால் கிழக்குப் பகுதியிலுள்ள பிரச்சினை தீர்ந்துவிடுமென அரசு நம்புகின்றது. அரசின் இந்த நம்பிக்கை தூரநோக்குடையதோ அன்றி புத்திசாலித்தனமானதோ அல்ல.

மாறாக, அவை மனிதப்படுகொலைகளையும், பேரழிவுகளையும் நாட்டில் தொடர்ந்து அமுல் படுத்திக் கொண்டே இருக்கும். தேர்தல்களை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியுமாக இருந்தால் அதனை எப்போதோ செய்திருக்க முடியும்.

ஆனால் இலங்கையில் தேர்தல், பிரச்சினை அல்ல. சிறுபான்மைத் தமிழ் மக்கள் தங்கள் மரபுவழித் தாயகத்தை வரையறை செய்து தமது சுதந்திரமான - அனைத்து உரிமைகளுடனான வாழ்வையே கேட்கிறார்கள்.

சுருங்கக்கூறின் இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த கோரிக்கை, பெரும்பான்மை இனம் அனுபவிக்கும் அதிகாரங்களையும், உரிமைகளையும் எமக்குத் தாருங்கள் என்பதாகும்.

இந்த உரிமைப் போராட்டத்தை மையமாக வைத்தே விடுதலைப் புலிகள் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில் சுமார் இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் ஆகுதியாகிப் போயுள்ளனர்.

விடுதலைப் போராட்டம் ஒன்றில் இது சாதாரணமான எண்ணிக்கை அல்ல. எனினும் இதனை அரசு சாதாரணமாகவே புரிந்து கொள்கிறது. அரசின் இந்தப் புரிதலுக்கான விளைவு பாரதூரமானதாக இருக்கும் என்பதை காலத்தின் அசைவுகளே நிரூபிக்கப்போகின்றன.

இந்த விரும்பத்தகாத எதிர்கால இழப்புக்களைத் தவிர்க்கும் வகையிலேயே தென்னாபிரிக்க அமைச்சரின் கருத்து அமைந்துள்ளது.

இதனை அரசு புரிந்து கொண்டால் எதிர்காலம் மகிழ்ச்சிகரமானதாக அமையும்.

# தமிழகத்தின் எதிர்ப்பு நடவடிக்கைகள் இலங்கை-இந்திய உறவினை பாதிக்காது

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

நெருக்கடியான காலகட்டத்தின் போது உதவிகளை வழங்கிய இந்தியாவுடனான பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகள் வலுவடைந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் அழுத்தங்கள் காரணமாக தமிழ் நாட்டில் சில எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதும் இத்தகைய எதிர்ப்புக்கள் இரு நாட்டு உறவுகளையும் பாதிக்காது என்று பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்கத்தின் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பயங்கரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட கிழக்கு மாகாண மக்களுக்கு விரைவில் பொருளாதார மற்றும் அரசியல் சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.

இவ்வாறான தொரு நிலையில் கிழக்கு மாகாணத்திற்குள் மீண்டும் பயங்கரவாதம் ஊடுருவாத வகையில் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

கிழக்கில் இருந்து விசேட அதிரடிப்படையினரை வெளியேற்றியமைக்கு அரசியல் அழுத்தங்கள் பிரயோகிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிள்ளையான் குழுவின் அழுத்தத்தின் காரணமாக விசேட அதிரடிப் படையினர் கிழக்கிலிருந்து வெளியேற்றப் பட்டனர் என்ற குற்றச்சாட்டுக்களிலும் தகவல்களிலும் எவ்விதமான உண்மையும் இல்லை.

பயங்கரவாதிகளிடமிருந்து கிழக்கு முற்றாக மீட்கப்படவேண்டும் என்ற நோக்கத் தை அடைந்து விட்டோம். கிழக்கு மீட்கப் பட்டபோது அங்கு பயங்கரவாதிகளி னால் சிறு சிறு சம்பவங்கள் மேற்கொள் ளப்பட்டன. எனினும் கிழக்கு மாகாணம் இன்று முழுமையான கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிழக்கில் சுமார் 22வருடங்கள் நிலை கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினரில் 25-30 வீதத்திற்கு இடைப்பட்ட வீதத்தினரே தற்போது விலக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் நேரடிக்கண்காணிப்பில் இருந்த விசேட அதிரடிப்படையினர் தேவைக்கேற்ற வகையில் விலகிக்கொள்ளப்பட்டதன் பின்னர் பொலிஸ்மா அதிபரின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத்திலிருந்து சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண மக்களுக்கு பொருளாதாரம் மற்றும் அரசியல் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டது எனினும் அங்கு மீண்டும் பயங்கரவாதிகள் ஊடுருவினர்.

எனினும் கிழக்கு மாகாணத்தில் எதிர்காலத்தில் பயங்கரவாதம் ஊடுருவாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிள்ளையானின் அதிகாரம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் விசேட அதிரடிப் படையினரின் அதிகாரம் அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற நிலையில் விசேட அதிரடிப்படையினரை விலக்கிக் கொள்ளுமாறு பிள்ளையான் ஏன் கோருகின்றார். அவ்வாறு கோரிக்கை விடுக்கவேண்டுமாயின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே கோரிக்கை விட்டிருக்கலாம்.

தேவைக்கேற்ற வகையில் அம்பாறை மாவட்டத்திலிருந்து குறிப்பிட்ட அளவு விசேட அதிரடிப்படையினர் மட்டுமே விலக்கிக்கொள்ளப்பட்டனர். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசியல் அழுத்தங்கள் இறைமை, ஒருமைப்பாட்டை பாதுகாக்கின்ற படையினரை மனதளவில் பாதிப்படையச் செய்கின்ற நடவடிக்கையாகும்.

உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிடாத கட்சிகள் இன்று கிழக்கு மாகாணத்தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகிவருகின்றனர். இந்த நிலையில் கிழக்கு மாகாணத்திற்குள் மீண்டும் பயங்கரவாதம் ஊடுருவாமல் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நெருக்கடியான நிலைமைகளுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருந்த போதெல்லாம், அண்டைய நாடான இந்தியா எமக்கு பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்புக்களை வழங்கி வந்துள்ளது.

இந்த நிலையிலேயே ஏற்கனவே திட்டமிடப்பட்டதன் பிரகாரம் இலங்கையின் இராணுவத் தளபதி இந்தியாவுக்கான விஜயத்தை மேற் கொண்டார்.

இந்த விஜயம் படைத்தரப்பு, இராஜதந்திர உறவுகளை மென்மேலும் வலுப்படுத்துவதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது. விடுதலைப்புலிகளின் அழுத்தங்கள் காரணமாக இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் சில எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது இரு நாட்டு பாதுகாப்பு இராஜதந்திர உறவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத பொருத்தமற்றசமிக்ஞையாகும். (அ-5)

# ஊடகவியலாளர்களுக்கு எதிரான மோதலை எதிர்த்து சர்வதேச ரீதியில் பிரசாரம்

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக நடத்தப்படும் மோதல்களுக்கு எதிரான பிரசாரமொன்றை முன்னெடுப்பதற்கு சர்வதேச ஊடக அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன. இது தொடர்பானமுறைப்பாடொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர் விக்டர் பெரேரா மற்றும் ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷனயாப்பா ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்களும் ஊடகப் பணியாளர்களும் நாளாந்தம் அச்சுறுத்தல்களுக்கு உட்படுவதுடன் ஊடகவியலாளர்களின் குடும்பங்களும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவதாக ஊடக அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டிருக்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது அவதானிப்புக்களின்படி இலங்கையிலுள்ள மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள ஊடகவியலாளர்களின் உரிமைகளைப்பேணுவதில்கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான மோதல்களை நிறுத்துமாறு சர்வதேச ரீதியில் பிரசாரமொன்றை முன்னெடுப்பதற்கு சர்வதேச ஊடக அமைப்புக்களான நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம் என அந்தக் கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணப்படும் இவ்வாறான சூழ்நிலையைத் தடுப்பதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருக்கும் அந்த அமைப்புக்கள், சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஊடகவியலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி பொலிஸார் மற்றும் அரசாங்கத்துக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்க வேண்டுமென தெரிவித்துள்ளன.

உலகளாவிய ரீதியிலான மனித உரிமைகள் சட்டத்தின் 79 சரத்தையும் ஜெனீவா மாநாட்டில் இணங்கப்பட்டவற்றையும் நிறைவேற்றுவதற்கும் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# நாம் ஓரடி வைத்தால் நம்மை நோக்கி நூறடி வைக்கும் பகவான் பாபா



ரஷ்யா பொஸ்னியா மீது போர் தொடுத்த போது பொஸ்னியர்கள் பலர் அயல் நாடுகளுக்கு ஓடினர். இவர்கள் அங்குள்ள அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். அவ்வேளை பகவானின் தீவிர பக்தையான பொஸ்னிய பெண்மணி ஒருவர் முகாம்களில் இருந்தவர்கள் மீது இரக்கப்பட்டு அவர்களுக்கு தன்னாலான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று விரும்பினார் . பாணும் பிஸ்கட் பைக்கட்டுக்களையும் ஒரு வாகனத்தில் ஏற்றி தூர இடத்தில் இருந்து கொண்டு வந்து கொடுத்தார். அப்படிக் கொடுக்கும் போது ஒவ்வொருத்தருக்கும் பகவானின் படமும் வீபூதி பைக்கற்றும் சேர்த்து வழங்கினார். அவர்கள் அப்பெண்மணி கொடுத்த பிஸ்கட்டையும் பாணையும் உண்ணும் போது பகவானின் படத்தைப் பார்த்து ஏதோ பேசிக்கொண்டார்கள் அவர்கள் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதை அவரால் அனுமானிக்க முடியவில்லை. அவர் மனதில் ஒரு ஆதங்கம் இவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதை அறிய வாகன சாரதியை நாடினாள் . சாரதி அவர்களிடம் சென்று விசாரித்தபோது அம் மக்கள் சுவாமியின் படத்தைக் காட்டிகூறினார்கள் . `இந்த மனிதர் தான் தினமும் எங்களுக்கு பாணும் பிஸ் கட்டும் தந்தவர் இன்றைக்கு இந்தப் பெண்மணியிடம் கொடுத்து விட்டிருக்கிறார்' என்று கூற சாரதியும் அதனை அப்பெண்மணியிடம் சொல்ல அப்பெண் மெய்மறந்து சுவாமியை நினைத்து வேண்டிக்கொண்டாள்.

இச் சம்பவத்தினை அப்பெண்மணியே புட்டபர்த்தியிலுள்ள பிரசாந்தியில் நடந்த கூட்டமொன்றில் சுவாமியின் அனுமதி யோடு கூறினார் . நாம் நல்லது செய்ய ஓரடி எடுத்து வைத்தால் போதும் பகவான் நமக்கு முன்னாலேயே எப்போதும் தொடர்ந்து கொண்டிருப்பார்.

பிறவி எனும் பயணத்தில் மனித உடல் ஒரு தங்கும் விடுதி. இறைவன் நம்மிடம் குலம், கோத்திரம், பணம், பதவியை பார்ப்பதில்லை. வாய்மை ,நேர்மை, தூய்மை அவற்றையே தேடுகின்றார்.

ஜெய்சாயிராம் - யாதவன்-

## மன்னாரிலும்...

படகுகள் தயாரிக்கும் நிலையம் ஒன்றின் மீது இரண்டாவது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.50 மணியளவில் ஜெட் விமானங்கள் இத் தாக்குதல்களை மேற்கொண்டன. புலனாய்வுத் தகவல்கள் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்ட பின்னரே இத் தாக்குதல்கள் நடைபெற்றதாகவும் குறிப்பிட்ட இலக்குகள் வெற்றிகரமாகத் தாக்கி அழிக்கப்பட்டதை விமானி உறுதிப்படுத்தியதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)

## ஓமந்தை...

ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி மூன்று வள்ளங்களில் விடுதலைப்புலிகள் கடத்திச் சென்று முரசுமோட்டை - வள்ளிபுனம் பகுதியில் தங்களை தடுத்து வைத்திருந்ததாகக் கூறியிருக்கின்றனர்.

அங்கிருந்து 4 தினங்களுக்கு முன்னர் தப்பி வந்து நேற்றுப் பகல் ஓமந்தை முன்னரங்கப் பகுதியில் இராணுவப் பகுதியை நோக்கி வந்தபோது தங்களைக் கண்ட விடுதலைப்புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் எனினும் தாங்கள் தொடர்ந்து ஓடிய போது இராணுவத்தினரும் தங்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-2)

## பிள்ளையான்...

பிள்ளையான் குழுவையும் கருணா குழுவையும் ஜனநாயகத்திற்குள் அழைத்து தேர்தலில் போட்டியிடும்படி கூறி பிரதேச சபை , நகரசபை மற்றும் மாநகர சபைகளின் தலைவர் பதவிகளை வழங்கியுள்ளதுடன் இவர்கள் தற்போது ஜனநாயகத்தினுள் பிரவேசித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்களிடமுள்ள ஆயுதங்களைக் களைந்தால் பிரபாகரன் நாளை அனைவரையும் கொலை செய்துவிடுவார் என்றும் இதனை நிறைவேற்றி வைப்பதே ரணில் விக்கிரமசிங்கவின் தேவையாகவுள்ளதாகவும் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். (ச-2)

## நெடுந்தீவுக்...

நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட இவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா உத்தரவிட்டுள்ளார். (ச-7)

# பேச்சுக்கு ஆக்கபூர்வமான யோசனையை அரசாங்கம் உடன் முன்வைக்க வேண்டும்

## சம்பந்தன் எம்.பி. கோரிக்கை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளுக்கு அடிப்படையான ஆக்கபூர்வமானதும் முன்னோக்கிச் செல்லக் கூடியதுமான தீர்வு யோசனைகளை அரசாங்கம் சமர்ப்பிக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வாக 13-வது அரசியல் யாப்பு திருத்தச் சட்டத்தை ஒருபோதும் ஏற்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். தேசிய சமாதானப் பேரவையினால் கொழும்பு ஜெயவர்த்தன கேந்திர நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், அரசியல் சாசனத்தின் 13-வது திருத்தச் சட்டம் ஒருபோதும் ஏற்கமுடியாதது. அது முன்னோக்கிச் செல்கின்ற ஒன்றல்ல. அதுபின்னடைவான ஒரு விடயம் என்பது தெளிவானது. அரசாங்கத்தின் தீவிர அர்ப்பணிப்புத் தொடர்பில் எமக்கு கடுமையான சந்தேகங்கள் உள்ளன. ஆனால் இந்தப் பிரச்சினை அமைதியான வழிமுறைகளில் தீர்க்கப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினை ஒருபோதும் யுத்தத்தின் மூலம் தீர்க்கப்பட முடியாது என்பது எமது உறுதியான நிலைப்பாடாகும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கு அடிப்படையானதும் ஆக்கபூர்வமானதும் முன்னோக்கி செல்வதுமான யோசனைகளை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என்றார். (ச-5)

# வெளிநாட்டு மக்களை அணிதிரட்டும் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி

## அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் போராட்டத்தில் தமிழ்த் தேசியத்திற்கு பலம் சேர்க்கும் வகையில் வெளிநாடுகளையும் வெளிநாட்டு மக்களையும் அணிதிரட்டுகின்ற பெரும் பணியினை தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி மேற்கொண்டு வருகின்றது என்று தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி நேற்றுடன் மூன்றாவது அகவையை நிறைவு செய்து நாலாவது அகவையில் கால் பதிக்கின்றது.

இந் நிகழ்வில், கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய பா.நடேசன் கூறியதாவது, தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியானது பெரும் நெருக்கடியையும் சவால்களையும் எதிர்கொண்டு தனது பணியினை முன்னெடுத்து வருகின்றது.

இத் தொலைக்காட்சியின் இலக்கும் கோட்பாடும் கொள்கையும் எமது மக்களை அரசியல் ரீதியாக ஒன்றுதிரட்டித் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழ்த் தேசியத்துக்கும் பலம் சேர்ப்பதுடன் மட்டுமல்லாது வெளிநாடுகளையும் வெளிநாட்டு மக்களையும் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களை ஆதரவாக அணிதிரட்டுவதற்கும் வழிவகுத்து வருகின்றது என்றார் அவர்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் மூன்றாவது அகவை நிறைவு விழா நேற்று முற்பகல் 9 மணிக்குத் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிப் பொறுப்பாளர் துளசிச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. (ச-5)

# கல்வியியல் முதுமாணி பரீட்சை முடிபுகள் வெளியாகின

2005/2006 கல்வியாண்டுக்கான கல்வியியல் முதுமாணிப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின. யாழ்.பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகம் ஆகிய இடங்களில் தமிழ், ஆங்கிலம் மூலம் கல்வியியல் முதுமாணியை மேற்கொண்டவர்களின் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

இதேவேளை பட்டப் பின் பொதுநிர்வாக டிப்ளோமா மீள் பரீட்சைப் பெறுபேறுகளும் நேற்று வெளியாகியுள்ளதுடன் வவுனியா வளாகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா (பகுதிநேரம்) முதலாம் வருடத்தின் முதல் அரைஆண்டுப் பரீட்சைப் பெறுபேறுகளும் நேற்று வெளியாகியதாக உயர் பட்டப் பின் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கே. கந்தசாமி தெரிவித்தார். (நு)

## மட்டு.வில் கிளைமோர்த் தாக்குதல்...

மட்டக்களப்பு உன்னிச்சையில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டட நிர்மாணப்பணிகளைப் பார்வையிடுவதற்காக நேற்றுக் காலை மட்டக்களப்பு நகரிலிருந்து யப்பானிய தொண்டு நிறுவன அதிகாரிகள் உன்னிச்சைக்குச் செல்லவிருந்தனர்.

அவர்களின் பயணத்திற்கு முன்னதாக அப் பகுதிக்குச் செல்லும் வீதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கண்காணிப்பதற்குச் சென்ற சிறப்பு அதிரடிப் படையினரையும் பொலிஸாரையும் உள்ளடக்கிய குழுவின் மீதே இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

பலகை ஒன்றின் கீழ் வீதியோரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டு தூரத்தில் இருந்து இயக்கப்படும் கருவி மூலம் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார். படுகாயமடைந்த மற்றொரு பொலிஸ் அதிகாரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார் என்றுதெரிவிக்கப்படுகின்றது. படுகாயமடைந்த இரண்டு அதிரடிப்படையினரும் இரண்டு பொலிஸாரும் மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து அப்பகுதியில் சிறப்புத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கின்றது. (ச-5)

## 'பிரபாகரன்' திரைப்பட இயக்கு...

வருகின்றது.

இந்தத் தகவல் தமிழர் அமைப்புக்களை சேர்ந்தவர்களுக்குத் தெரியவந்தது. இதையடுத்துத் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், இயக்குநர் சீமான், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செய்தித் தொடர்பாளர் வன்னியரசு உள்ளிட்டோர் தலைமையில் 50ற்கும் மேற்பட்டோர் அக்கலர் லாப்புக்கு விரைந்தனர்.

அங்கு கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிரபாகரன் படம் பிறிண்ட் போடும் பணியை நிறுத்த வேண்டும் என்று கோரிக் கோஷம் இட்டனர். இதையடுத்து இயக்குநர் பீரிஸ், தமிழர் அமைப்பினரைச் சமாதானப்படுத்துவதற்காக வெளியே வந்தார்.

அப்போது கூட்டத்திலிருந்த சிலர் பீரிஸ் மீது பாய்ந்து அவரை சரமாரியாக அடித்து உதைத்தனர். இதனால் பீரிஸ் அதிர்ச்சியடைந்தார். அங்கு பரபரப்பு ஏற்பட்டது. (ச-5)

## வடக்கு - கிழக்கை இணைப்...

எனினும் வடக்குக் கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டிருப்பதை எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்களுக்குத் தனியான அலகுடன் கூடிய வடக்குக் கிழக்கு இணைப்பிற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒத்துழைப்பு வழங்கும் என முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி நிஷாம் காரியப்பர் கூறியுள்ளார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இந்தப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனநாயகக் குழு உறுப்பினர் அமைச்சர் பி. ரட்ணாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் ஜாதிக ஹெலஉறுமய ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவில்லை.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் இணங்கப்பட்டிருக்கும் முஸ்லிம் சமூகத்தினருக்குத் தனியான அலகுடன் கூடிய வடக்குக் கிழக்கு இணைப்பு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)


10 மணி, பங்குனி 27 - 2008

உலக நாடக தினம்

ஆற்றுகைகள் மேடையேற்றப்படும்

பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்

கைலாசபதி கலையரங்கு, வெறுவெளி அரங்க குழு

அனுசரணையாளர்கள்

**KUGAN COPYIST**
Computer works, Digital photo coping, Laser colour printing, Spiral binding, Scanning, Laminating, C/D, DVD writing.
214C, Ramanathan Road, Thirunelvely.

**SIVARAJ TRADING CO**
மின்சாரப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள் விற்பனையாளர்.
163, Main Street, Point pedro.

**NEW MICRO COMPUTER CENTER**

(965)


## இலங்கையின் ஆயுதக் கொள்வனவால்...

இலங்கைத் தமிழர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையை வழங்குமாறு இலங்கை அரசிடம் இந்தியா வேண்டி நிற்கிறது. அதேவேளை ஆசிய பிராந்தியத்தில் இலங்கை,ஆயுதக் கொள்வனவு செய்வதையிட்டுப் புதுடில்லி குழப்பமடைந்துள்ளது என இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம். கே.நாராயணன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் 25-வது ஏயார் மார்சல் பி.ஸி. லால் ஞாபகார்த்த வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியுள்ளதாவது,

இலங்கையில் போர்நிறுத்த உடன்படிக்கை முறிவடைந்ததன் பின்னுள்ள அச்ச நிலையை நாம் உன்னிப்பாக அவதானிக்கின்றோம். இதனாலேயே தமிழ் மக்கள் கௌரவமாக வாழக் கூடிய அதிகாரத்தை வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் வேண்டி நிற்கின்றோம்.

ஆனால் இலங்கை அரசாங்கமோ அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை காட்டாமல் அவர்களின் ஒரே நோக்கான இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்வதிலேயே குறியாகவுள்ளது.

தெற்காசியப் பிராந்தியத்தில் தலைமை நாடாக இந்தியாவுள்ளபோதும் ஏனைய நாடுகளிடம் இலங்கை ஆயுதங்களைக்கொள்வனவு செய்வதனை இந்தியா ஏற்றுக் கொள்ள கூடியதாகவில்லை.

எனினும் இராணுவ உதவிகளை வழங்குவதற்கோ அல்லது அழுத்தங்களை வழங்குவதற்கோ இந்தியாவிடம் ஒரு தேசியக் கொள்கையுள்ளது. அதனை நாம் கடைப்பிடிப்போம்.

இலங்கை இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்று வரும் போரில் கடந்த இரு வருடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் ஒருபோதும் தீர்வு காண முடியாது என்பதையே இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

அத்துடன் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்கக் கூடிய ஒரு அதிகாரப் பரவலாக்கல் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென நாம் உறுதியாகவுள்ளோம்.

இலங்கை இராணுவத்திற்கு இந்தியா பயிற்சி வழங்குவதைத் தொடர்ந்தாலும் இராணுவத் தளபாடங்களை வழங்கவில்லை. இவ்வாறு இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் தெரிவித்தார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 27.03.2008இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.